# உறவுகள்

தை மாசி பங்குனி

uravukal



Amonerie Tamoule catholique Srilankaise 57, Bld de Belleville, 75011 - PARIS - FRANCE. இதழ் 97

இலங்கைத் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப்பணியகத்தின் காலாண்டுப் பத்திரிகை







இறைவனின்
அன்பும் அருளும் ஆசீரும்
என்றும் உங்களுடன்
தங்குவதாக!

அன்னைமரி இறைவனின் தாய்



# உன்னை.....


இதழ் 97

தை: மாசி: பங்:


## தலைப்புகள்


3 ஆசிரியர் பக்கம்

4 விழி திறந்து.....

5 புனித கதவின் வரலாறு....

6 உன்னையே நீ அறிவாய்..

7 மரியா இறைவனின் தாய்......

9 எவரை ஏழையர் என்போம்......

12 மீடபின் பாதை.......

13 மழலை மஞ்சம்

16 மனிதனின் வாழ்நாள்......

18 தூரத்து அழகு.....

19 கடவுள் மனசு....

23 என் காலடிக்கு உம்......


**31- 05-2026 சார்ட் திருத்தல திருயாத்திரை**

14:30 Cathedrale Notre Dame -18 Cloitre Notre dame - Chartres

**குறுக்கெழுத்து போட்டி 91டின் விடைகளை தயவு செய்து 05-03-2026 க்கு முன்பு பணியகத்திற்கு அனுப்பி வையுங்கள். நன்றி**

**சிறுவர்களுக்கான ஒன்று கூடல்**



பெல்வில் சிற்றாலயத்தில் நேரம்: 9:00

01-02-2026

01-03-2026


**ஆசிரியர்:**

அருட்பணி: போல் மத்தியூ மதன்ராஜ்

பணியக இயக்குனர்

**உதவி ஆசிரியர் குழு:**

மறையாசிரியர்: திரு: ரி. எம்.சந்தியாகு

சில்வெஸ்ரர் தம்பிராசா

திருமதி: றெஜீனா சிவகுமாரன்

திரு: ஆனந்தன் செபமாலை

திருமதி:வில்லியம் றெஜினோல்ட்

திருமதி: ஏஞ்சல் யேக்கப்

செல்வி: லூசியா மேரி

செல்வி: புளோறன்ஸ் யாழ்நிலா



**தொடர்புக்கு:**

« URAVUKAL »

Aumônerie Tamoule Catholique

Srilankaise

Chapelle Notre Dame Réconciliatrice

57, Bld de Belleville

75011 Paris - France

☎: 01 48 06 95 05

**E - mail:** uravukhal.france@gmail.com

**Website:** www.uravukal.org



**வெளியீடு:**

இலங்கைத் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகம் - பிரானஸ்

**கணினி வடிவமைப்பு:**

றெஜீனா சிவகுமாரன்

**சந்தா விபரம்**

தனிப்பிரதி ஒன்று: 2€

வருடச் சந்தா விபரம்: 20€

ஏனைய நாடுகளுக்கு: 22€

# ஆசிரியரிடமிருந்து...........



**உமது பேரன்பு என்றென்றும் நிலைத்துள்ளது என்று அறிவிப்பேன் உமது உண்மை வானைப்போல் உறுதியானது. (தி.பா 89:2)**

எனது அன்பு உறவுகளுக்கு! அன்பே அனைத்திலும் மேன்மையானது என்பதை தனது பிறப்பு, வாழ்வு, இறப்பின் மூலம் எமக்கு காட்டியுள்ளார் எமதன்பர் இயேசு. அவரின் பாத வழி பயணிக்கும் நாம், வாழ்வாலும், வார்த்தையாலும் அவரின் சாட்சிகளாக வாழவேண்டும். பெற்றுக்கொண்ட திரு அருள் அடையாளங்களை புனிதத்துடன் காக்க வேண்டும். மனித நேயம் நம்மிடம் நிலைத்து இருக்க வேண்டும். இயேசு தான் வாக்களித்த தூய ஆவியானவரை அனுப்பி நன்மை தரும் கனிகளாலும், கொடைகளாலும் நம்மை நிரப்பி உள்ளார். எனவே இறையச்சம் நிறைந்த ஞானத்தோடு நாம் செயல்பட வேண்டும்.

எமது பணியகத்தால் நடாத்தப்பட்ட ஒளிவிழா போட்டிகளில் பாலர்கள் முதல் வளர்ந்தோர் வரை பங்கு கொண்டு, சிறப்பாக தமது கிறிஸ்தவ விசுவாசம், மொழி பற்று, அறிவு, ஆற்றல், கலை திறன் அனைவரையும் ஆரோக்கியமான முறையில் வெளிப்படுத்தினர். **அனைவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.**

நடைபெற்ற ஒளி விழா நிகழ்வுகளிலும் அனைத்து காரியங்களிலும் உடன் இருந்து உழைத்த அனைவருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள். கிறிஸ்து பிறப்பு விழா, புது வருட திருப்பலிகள் பல பணித்தளங்களில் சிறப்பாக நடைபெற்றது எண்ணி இறைவனுக்கு நன்றி கூறுகிறேன்.

அத்துடன் ஆன்மிக பணிகளை என்னுடன் இணைந்து செய்த அனைத்து அருட்பணியாளர்களுக்கும் எனது அன்பு கலந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எமது தேசத்தில் அதிகம் கூடிய மழை பொழிவினால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு, மண்சரிவு இவ்வாறான பல துன்பங்களுக்கு உட்பட்ட உறவுகளுக்கு மனம் உவந்து அனேகமான நல்ல உள்ளங்கள் தாராளமான உதவிகளை செய்துள்ளீர்கள். "ஒவ்வொரு மனிதனும் என் நண்பன் ஒவ்வொரு மனிதனும் சகோதரன்" எனும் பாடல் வரிகள் உண்மை என்பதை நிருபித்துள்ளீர்கள். கீழ் தேசத்தில் இருந்து வந்த ஞானிகள் கொடுத்த அன்பு பரிசுகளாக இயேசு பாலனுக்கு இது இருக்கும். இனிவரும் காலங்களிலும் எமது பணியகத்தின் அனைத்து நிகழ்வுகளிலும் சிறப்பாக இணைந்து செயல்பட அன்போடு அழைத்து நிற்கின்றேன். அத்தோடு எமது ஆன்மிக பணியகத்தால் வெளியிடப்படுகின்றன இந்த" உறவுகள்" பத்திரிகைக்கு உங்கள் ஒத்துழைப்பு ஆக்கங்களையும் கேட்டு நிற்க்கின்றேன்.

தூய ஒளியின் வழியில் எம்மை அழைத்து செல்லும் இறைவனின் அருளும் ஆசியும் இப் புதிய ஆண்டு முழுவதும் நிறைவாக உங்களோடு இருந்து அமைதி ஆரோக்கியம் மகிழ்ச்சி பெற்று வாழ ஆசி கூறி வாழ்த்தி நிற்கும் உங்கள் அன்பு

**அருள்பணி: போல் மத்தியு மதன்ராஜ் அ.ம.தி**




1. ஆண்டவரின் திருமுழுக்குப் பெருவிழாவை சிறப்பிக்கும் இந்த ஞாயிற்றுக் கிழமையில், திருத்தந்தை லியோ உள்ளிட்ட திருஅவைத் தலைவர்களும், இறைமக்களாகிய நாங்களும், திருமுழுக்கு வழியாக நாங்கள் பெற்றுக்கொண்ட அழைத்தலுக்கு ஏற்ற வாழ்க்கையை நடத்த வேண்டுமென்றும், எங்கும் நன்மை செய்துகொண்டே சென்ற இயேசுவிடம் இருந்த மனநிலையோடு, நாங்கள் ஒவ்வொருவரும் பயணிக்க வேண்டுமென்றும், இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. எம்மில் ஒருவரைப் போல் திருமுழுக்குப் பெற்ற இயேசுவைப் போல, இங்கே கூடியுள்ள நாங்கள் அனைவரும், எங்கள் தமிழ்ச் சொந்தங்களோடு சேர்ந்து, நன்றி பாராட்டுதல், உழவரையும் உழைப்பவரையும் மதித்தல், பிற உயிரனங்களையும் மாண்புடன் நடத்துதல், காண்போரை எல்லாம் மனம் நிறைய வாழ்த்துதல் ஆகிய விழுமியங்களை உள்ளடக்கிய தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை கொண்டாடி, பிறக்கின்ற தை முதல், பொங்கும் மகிழ்வுடன், வாழ்வில் சிறக்க வேண்டுமென்று, இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## பிறர் வாழ்வை உயர்த்துவது பிணி தீர்க்கும் செயலன்றோ

மறையாசிரியர் தி. ம. சந்தியாகு, வேங்கிடக்குளம் இந்தியா

**1. சுதந்தரப் பறவைகள்நாம் சொல்லுகின்ற காரனங்கள்,**
சுதனேசு வழிகாட்ட சோர்வினைத் தருகின்றன!
வதம்செய் வார்த்தைகளை வழக்கமாய் பயன்படுத்தி,
வாழ்வினைப் பாழடிக்கும் வதையினை மாற்றிவோம்!
நிதம் நம் கடமைகளை நினைவுறுத்திச் செயல்பட்டால்,
நேர்மை, உண்மைவழி நிலைவாழ்வு பெருகி வரும்!
சதம் அடிக்கும் சரித்திரத்தை சாத்தியப் படுத்திடும்நாம்,
சரியாக யோசிப்போம் சமத்துவம் பேணிடுவோம்!

**2. திருஅவை வகுத்திருக்கும் திருக்காலம் தனையறிந்து,**
திருப்பணிகள் புரிவதுவே தித்திக்கும் செய்தியாகும்!
பெருவாழ்வை எதிர்நோக்கி பேரன்புக் குரல் கொடுத்து,
பிறர்வாழ்வை உயர்த்துவது பிணிதீர்க்கும் செயலன்றோ?
கருவில் கலைந்திட்டால் கடுகளவும் தலையெடுக்கா,
கருமமே கண்ணாகிக் களைந்திடுவோம் தீமைகளை!
உருமாற்றம் தேவையென உயர்கிறிஸ்து நமக்குரைத்த,
உண்மைகளை உள்வாங்கி உயர்வானில் இடம்பெறுவோம்!

**3. வழக்கம்போல் வந்துசெல்லும் வாழ்வளிக்கும்கிறிஸ்துமஸ்**
வளம் தந்து உரமேற்றும் வரலாற்றுப் புத்தாண்டு,
பழக்கத்தால் கொண்டாடி பயணத்தை முடித்துள்ளன.
படிப்பினைகள் தந்ததென்ன ? பாங்குடனே சிந்திப்போம்!
முழக்கத்தால் திருமறையை முச்சந்தி தவறாமல்,
முறையோடு கற்பித்தால் முன்னேற்றம் வந்திடாதோ?
எழக்கற்றுக் கொடுப்போம்நாம் ஏழைகள் இயலார்க்கு
இறையாட்சிக் கொடைகளையே எடுத்துரைப்போம்
சான்றுகளாய்!

**4. வித்தகராம் இறையோரே வீடெங்கும் நாடெங்கும்,**
விதைத்திடுவோம் அருள்வாழ்வை விழித்தெழட்டும் மக்கள்
திரள்
உத்தமராம் இயேசுவழி உயர்ந்தென்றும் புகழ்பாடி,
உழைத்திட முன்வருவோம் உருமாற்றம் வந்துவிடும்!
சத்தான சாதனைகள் சமத்துவப் போதனைகள்
சற்குணத் தத்துவங்கள் சகலரையும் கவர்ந்துவரும்!
எத்தனையோ வழிமுறைகள் இருக்கின்றன வையகத்தில்,
எடுத்துரைப்போம் மறைவழியை எண்திக்கும் நன்மைபெறும்!

**5. பொன்னான காலமிது போகட்டும் என்றிராமல்,**
புறப்படுவோம் இப்போதே புனிதபணி ஆற்றிடவே!
என்னாலும் தத்துவங்கள் இறையேசு வாழ்நெறிகள்,
எப்போதும் நம்நாவில் எழுந்திட்டும் அகமகிழ்வோம்!
உன்னாலே முடியுமென்று உலகம் நமை அழைக்கையிலே,
உதவாக் கரையாக ஒவ்வதைத் தளர்த்திடுவோம்!
தன்னையே தருவதுதான் தரமுள்ள போதனையாம்
தரணியில் நாம் கொடுத்து தலைவரேசு வழி தொடர்வோம்

## ஒரு சீடரின் பண்புகள்

**உரோ: 5:12,15,17–19, 20–21 லூக்: 12,35–38**

இயேசுவில் இனிய இணைய தள அன்பர்களே,

இயேசுவின் சீடரிடம் இருக்கவேண்டிய இரு முக்கியமான பண்புகளை இன்றைய வாசகம் சுட்டிக்காட்டுகிறது: அவர்கள் நம்பிக்கைக்குரியவரும், அறிவாளியுமாக இருக்கவேண்டும் என்று எதிர்பார்க்கிறார் ஆண்டவர். இயேசு தம் சீடரிடம் சில பொறுப்புகளை ஒப்படைத்திருக்கிறார். நற்செய்தி அறிவித்தல், சான்றுகளாய் வாழ்தல், நலப்படுத்துதல் போன்ற பணிகளே அவை. இப்பணிகளை நாம் நம்பிக்கைக்குரிய விதத்தில் ஆற்றவேண்டும் என எதிர்பார்க்கிறார் இயேசு. யாரெல்லாம் இப்பணிகளை நம்பிக்கைக்குரிய விதத்தில் நிறைவேற்றுகிறார்களோ, அவர்களே திருச்சபையால் புனிதர்கள் என்று ஏற்பிசைவு செய்யப்படுகிறார்கள். இரண்டாவது பண்பு: அறிவாற்றல். அறிவுக் கூர்மையுடன் காலத்தின் தேவைகளை அறிந்து, செயல்படுபரே நல்ல சீடர். இந்த அறிவு மறையறிவு, இறைமொழி அறிவு, பொது அறிவு, உளவியல் அறிவு என முழுமையான அறிவாற்றலாக இருத்தல் வேண்டும்.

இயேசு நமக்கு எடுத்துக்காட்டாக இருக்கிறார். தந்தை இறைவன் அவரிடம் ஒப்படைத்த பணியை இயேசு நம்பிக்கைக்குரிய விதத்திலும், அறிவாற்றலுடனும் செயல்படுத்திக் காட்டினார். தந்தையின் பாராட்டைப் பெற்றார். இவரே என் அன்பார்ந்த மகன், இவரில் நான் பூரிப்படைகிறேன் என்று வாழ்த்தினார். நாமும் நமது கடமை–களை, பொறுப்புகளை நம்பிக்கைக்குரிய விதத்திலும், அறிவாற்றலுடனும் ஆற்றி, இயேசுவின் பாராட்டை, திருச்சபையின் ஏற்பிசைவைப் பெறுவோமா!

**மன்றாடுவோம்:**

எங்களைப் பெயர் சொல்லி அழைத்த அன்பின் தெய்வமே, இயேசுவே. உம்மைப் போற்றுகிறோம். நீர் எங்களுக்குத் தந்த அழைத்தலின் படி, நாங்கள் நம்பிக்கைக் குரியவர்களாகவும், அறிவாற்றல் மிக்கவர்களாகவும் பணி செய்ய எங்களுக்கு உமது தூய ஆவியை நிறைவாகத் தந்தருளும். உமக்கே புகழ், உமக்கே நன்றி, உமக்கே மாட்சி, ஆமென்.

## சிரி.....சிரி.....சிரி



போனில்...

""நாங்க உஙக மனைவியை கடத்தி
வைச்சுருக்கோம்.. ஐந்து லட்சரூபாய் கொடுத்தா விட்டுடறோம்...""

""ஐந்து என்ன பத்துலட்ச ரூபாயே தரேன்.. ஆனா திருப்பி மட்டும்
அனுப்பிடாதீங்க.."

# புனித கதவின் வரலாறு மற்றும் முக்கியத்துவம்

### 1. புனித கதவின் உருவாக்கம் மற்றும் நோக்கம்:

புனித கதவு, யூபிலி ஆண்டின் முக்கிய அடையாளமாகவும், பாவ மன்னிப்பு மற்றும் மனம் திரும்புதலுக்கான அழைப்பாகவும் திகழ்கிறது. திருத்தந்தையின் அறிவிப்பின்படி, யூபிலி ஆண்டின் போது திறக்கப்படும் இந்த கதவு, பாவமன்னிப்பின் வழிவாயிலாகக் கருதப்படுகிறது.

### 2. ஆக்குயிலா மரியன்னை திருத்தலத்தில் புனித கதவு (1294):

திருத்தந்தை புனித ஐந்தாம் செலஸ்டீன் தலைமையில், முதல் புனிதக் கதவு 1294 ஆம் ஆண்டில் அறிவிக்கப்பட்டது. அந்நிகழ்வு **Inter sanctorum solemnia** என்ற மன்னிப்பு அறிக்கையுடன் தொடங்கியது.

### 3. தூய பேதுரு பெருங்கோவில் புனித கதவு:

1475 ஆம் ஆண்டில் திருத்தந்தை ஆறாம் சிக்ஸ்துஸ் இந்த கதவை உருவாக்கினார். ஆரம்பத்தில் 50 ஆண்டுகளுக்கு ஒருமுறை திறக்கப்பட்ட புனித கதவு, தற்போது நான்கு முக்கிய ஆலயங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

## புனித கதவின் சடங்கு மற்றும் பண்புகள்

### 1. புனித கதவின் திறப்பு முறைகள்:

யூபிலி ஆண்டின் தொடக்க விழாவில், திருத்தந்தை மூன்று முறை சுத்தியலால் கதவின் சுவர் இடிக்கிறார். இது பாவச்சுவர் இடிக்கப்பட்டு மன்னிப்புக்கான வழி திறக்கப்படுவதை குறிக்கிறது.

### 2. பயன்பாட்டுப் பொருட்கள்:

**சுத்தியல்:** 1499 முதல் புனித கதவின் திறப்பில் முக்கியப் பங்கு வகிக்கிறது.

**கரணை:** சுவர் கட்ட பயன்பட்ட கலவை.

**செங்கற்கள் மற்றும் நாணயங்கள்:** புனித கதவின் சுவர்களில் வைக்கப்பட்ட புனித அடையாளங்கள்.

## புனித கதவின் கலைப்பண்புகள்

### 1. புனித கதவின் வடிவமைப்பு:

இந்த கதவு 3.60 மீட்டர் உயரமும் 2.15 மீட்டர் அகலமும் கொண்டது. இது 16 விவிலிய நிகழ்வுகளை சிற்பமாகக் குறிக்கிறது. "வானதூதர்கள்," "ஆதாம்–ஏவாளின் பாவம்," மற்றும் "இயேசுவின் சிலுவை ஏறுதல்" போன்ற முக்கிய நிகழ்வுகள் சிற்ப வடிவில் இடம்பெற்றுள்ளன.

### 2. கலைஞர் விகோ கன்சோர்டியின் பங்கு:

விகோ கன்சோர்டி, ஒன்பது மாதங்களில் இந்த கதவின் சிறப்பான வடிவமைப்பை நிறைவு செய்தார்.

## பாரம்பரிய நிகழ்வுகள் மற்றும் முக்கியத்துவம்

### 1. முதல் யூபிலி ஆண்டு (1300):

திருத்தந்தை எட்டாம் போனிஃபாஸ் தலைமையில், புனித கதவு திறப்பு விழா நடத்தப்பட்டது.

### 2. திருப்பீடத்தின் புதிய முயற்சிகள்:

தூய பேதுரு பெருங்கோவில் மற்றும் பிற பெரிய ஆலயங்களில் யூபிலி ஆண்டின் முக்கிய நிகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

### 3. மன்னிப்பு பெறும் வழிபாடு:

யூபிலி ஆண்டில் மக்கள் புனித கதவின் வழியாக நுழைந்து, திருத்தந்தையின் செபத்தில் பங்கேற்று, பாவ மன்னிப்பினை அடைகின்றனர். புனித கதவின் வரலாறு மற்றும் அதன் தொன்மையான பாரம்பரியத்தை மிகத் தெளிவாகவும் அமைதியாகவும் இன்று மறு ஒளி பாய்ச்சுகிறது.

# பாட்டி தாத்தாக்கு படையல்



மகன் : அம்மா பிசிக்குது

அம்மா : கொஞ்சம் பொறு இணைக்கு பாட்டி தாத்தாக்கு படையல் வச்சிட்டு சாப்பிடலாம்

மகன் : பாட்டி தாத்தாக்கு படையல் போர்டா பெரிய அம்மா

அம்மா : ஆமா ஏன்டா

மகன் : என்ன படையல்

அம்மா : முறுக்கு, அதிரசம், லட்டு, குளோபிஜாமுன் அப்பறம் வடை பாயசம் எல்லாம் ரெடியா இருக்கு

மகன் : எவளோ செய்ஞ்சியமா நீ

அம்மா : ஆமாடா ஏன் கேக்குற?

மகன் : இல்ல பாட்டி தாத்தா இல்லாதப்ப இவ்வளோ செய்ஞ்சிருக்க, ஆனா அவங்க இருந்தப்ப, அப்போ அவங்க சாப்பிடுவாங்க. ஆனால் அவங்க கேட்டாலும் ஒன்னும் செஞ்சி தரமாட்ட. இப்போ அவங்க பேரு சொல்லி நம்ம தானே சாப்பிடுவோம். இப்போவே நீயும் சாப்பிட்டுக்கோ, நாளைக்கு உனக்கும் இப்பிடி தான்......

## இன்றைய மன்னா

அவமானத்திற்குப் பதிலாக நீங்கள் இருபங்கு நன்மை அடைவீர்கள். அவமதிப்புக்குப் பதிலாக உங்கள் உடைமையில் மகிழ்வீர்கள். ஆதலால், நாட்டில் உங்கள் செல்வம் இருமடங்காகும். முடிவில்லா மகிழ்ச்சியும் உங்களுக்கு உரியதாகும். ஆண்டவராகிய நான் நீதியை விரும்புகின்றேன். அவர்கள் வழிமரபினர் பிற இனத்தாரிடையேயும், அவர்கள் வழித்தோன்றல்கள் மக்களினங்கள் நடுவிலும் புகழ் அடைவார்கள். அவர்களைக் காண்பவர் யாவரும் அவர்களை ஆண்டவரின் ஆசிபெற்ற வழிமரபினர் என ஏற்றுக்கொள்வார்கள். எசாயா 61:7–9.

**இந்நாள் ஆசீர்வாதமாக அமைவதாக.**

## சிரி.....சிரி.....சிரி



1) வரதட்சனையை வாங்கிட்டு கல்யாணம் செஞ்சது என் மனதை உறுத்திக்கிட்டே இருக்குது....

2) அதனாலே........

1) வரதட்சனையே வாங்காம இன்னொரு கலியாணம் செய்து பிராயச்சித்தம் பண்ணப்போறேன்.......

---

1) தம்பி உங்க பக்கத்து வீட்டுப் பெண் பாமாவை எங்க பையனுக்கு கேட்கலாம் என்று இருக்கோம். பொண்ணு எப்படி?

2) நான் காதலிச்ச வரைக்கும் அந்த பொண்ணு நல்ல பொண்ணு தான் சார்.......

# உறவுகள்

பல நூற்றாண்டுகளுக்கு முன்பு கிரேக்க ஞானி சோக்கிரடீஸ் « உன்னையே நீ அறிவாய் » என்னும் தத்துவத்தைக் கூறினார்.

காலத்திற்கு காலம் இத்தத்துவம் உளவியல் வல்லுனர்களால் வலியுறுத்தப்பட்டுக் கொண்டு வந்தது. இத்தத்துவம்தான் எல்லா வெற்றி வாழ்வுக்கும் அடித்தளமாய் உள்ளது. எம்மில் எத்தனை பேர் எம்மையே நாம் நன்கு அறிந்துள்ளோம்? சாதாரண மனிதன், தான் வைத்திருக்கும் வாகனங்களைப் பற்றி நன்கு அறிந்து வைத்துள்ளான். அதன் பின்னரே தன்னைப் பற்றி அறிய முற்படுகிறான். எமது வளமான வாழ்விற்கு எம்மிடத்திலுள்ள வளங்கள் எவை? என்று அறிந்திருப்பது மிகவும் அவசியம். இதற்கு பின்வரும் வினாக்களை எம்மிடம் நாமே கேட்டுப் பார்ப்போம்.




1. நான் வாழ்வதற்குக் காரணம் என்ன? ஏதோ நான் இருக்கும் இடத்தை அடைத்துக் கொண்டிருக்கின்றேனா? அல்லது எனது வாழ்விற்கு ஒரு உன்னதமான குறிக்கோள் உண்டா? எனது நாளாந்த வாழ்வை எவ்விதமான திருப்தியோ, மகிழ்ச்சியோ இல்லாமல் வாழ்ந்து கொண்டிருக்கின்றேனா?

2. என்னுடைய வாழ்விலே நான் எதைச் சாதிக்க விரும்புகின்றேன்? ஏதோ நாளாந்த செயற்பாடுகளோடு திருப்தியாக இருக்க விரும்புகின்றேனா? அல்லது நான் வாழும் சமூகத்திற்கு என்னால் முடியுமான பங்களிப்பைச் செய்ய முயற்சிக்கின்றேனா? நான் எப்படிப்பட்ட பங்களிப்பைச் செய்து கொண்டிருக்கின்றேன்? **"நாடு உனக்கு எதைச் செய்தது என்று கேட்பதை விட்டு நாட்டுக்கு நீ எதைச் செய்தாய்? என்று கேள்"** என்று கூறினார் முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஜோன். எவ். கென்னடி.

இவ்வாறான நோக்கம் இருப்பதற்கு, எம்மையே நாம் நன்கு அறிந்திருப்பது அவசியம். எம்மை அறிந்திருப்பது என்பது மட்டுமல்ல எமது பலங்கள், பலவீனங்களோடு எம்மை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். எமது ஆற்றல்கள், திறமைகள் எம்மால் சாதிக்கக் கூடியவற்றை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். எமது குறைகள், பலவீனங்களையும் ஏற்றுக்கொள்வது அவசியம். அவை எம்மிடம் இல்லை என்று எம்மையே நாம் ஏமாற்றிக் கொள்ளக்கூடாது. இத்தகைய சுய ஆய்வுத் தேடல் எமது வாழ்வில் புதியன பல காண வழி வகுக்கும்!

3. எனக்கென்று ஒரு திட்டம், நிகழ்ச்சி நிரல் உண்டா? எனது நோக்கம், இலட்சியத்தை அடைய என்ன வழிகளை வகுத்துள்ளேன்? இந்த இலட்சியத்தை நோக்கி முன்னேறுவதில் நான் வெற்றி கண்டுள்ளேனா? அப்படி முன்னேற்றத்தை நான் காணாது போனால் அதற்கு காரணம் என்ன? எனது நோக்கத்தில் நான் எப்பொழுதும் தெளிவாக இருக்கின்றேனா?

4. எனது இலட்சியத்தை அடைவதற்கு என்னிடமுள்ள வளங்கள் என்ன? எனது ஆளுமை என்னிடம் உண்டு. நான் தனித்துவமானவன். இவ்வுலகில் என்னைப் போல் வேறொருவர் இல்லை. அப்படியென்றால் நான் செய்யக்கூடிய பங்களிப்பை இன்னொருவர் செய்ய முடியாது – நான் அப்பங்களிப்பை செய்தே ஆக வேண்டும். எப்படிப்பட்ட ஆற்றல்கள் என்னிடமுண்டு? அப்படிப்பட்ட ஆற்றல்களை நான் தட்டிக்கழிக்கின்றேனா? அல்லது அவற்றை மிகைப்படுத்திக் கூறுகின்றேனா? இப்படி செய்வதால் நான் என்னையே ஏமாற்றிக் கொள்கிறேன். உமது இலட்சியத்தை அடைவதற்கு உம்மிடமுள்ள வளங்கள் எவை?

5. மற்றவர்களைப் பற்றி எனது அபிப்பிராயம் என்ன? மற்றவர்களோடு எனக்கு உள்ள உறவு திருப்தியாய் உள்ளதா? அப்படி இல்லையென்றால் அப்படிப்பட்ட நிலைக்கு நான் எவ்வளவு காரணனாக இருக்கின்றேன்? என்னைப் பற்றி மற்றவர்கள் அக்கறை கொள்ள வேண்டுமென்று நான் எதிர்பார்ப்பது போல, நான் மற்றவர்கள் மட்டில் அக்கறை கொண்டுள்ளேனா?மற்றவர்களிடம் போவதற்கு, அவர்கள் விருப்பத்தோடு செய்வதை நான் விருப்பத்தோடு தேடிச் செல்கிறேனா?

6. நான் என் வாழ்வில் மகிழ்ச்சியாக இருக்கின்றேனா? நான் மகிழ்ச்சியாக இல்லை என்றால் அல்லது பயத்தோடு வாழ்ந்தால் அவற்றிற்கு காரணம் என்ன? என் மட்டில் எப்பொழுதும் நான் நேர்மையாக இருப்பது அவசியம். உமது திருப்தியீனங்கள், மனவுடைவுகள் எவை? எம்மை நாமாக ஏற்றுக் கொள்வதற்கு நாம் ஆயத்தமாக இருக்க வேண்டும். நீங்கள் சாதிக்க கூடியவைகள், அதற்காக உங்களிடம் இருக்கும் வளங்களை அலட்சியம் செய்ய வேண்டாம். உங்களிடம் இருக்கும் குறைபாடுகளையும், ஏற்றுக் கொள்வது அவசியம். அவை உங்களிடம் இல்லை என்று பாசாங்கு செய்ய வேண்டாம். இப்படிப்பட்ட சுய ஆய்வுக்கான தேடல் உங்களில் ஒரு புதிய நிலையை உருவாக்க உதவி செய்யும்.

## திருவார்த்தை

"அனைத்துலகோரே! ஆண்டவரை ஆர்ப்பரித்து வாழ்த்துங்கள்! ஆண்டவரை மகிழ்ச்சியுடன் வழிபடுங்கள்! மகிழ்ச்சி நிறை பாடலுடன் அவர் திருமுன் வாருங்கள்! ஆண்டவரே கடவுள் என்று உணருங்கள்! அவரே நம்மைப் படைத்தவர்! நாம் அவர் மக்கள், அவர் மேய்க்கும் ஆடுகள்! நன்றியோடு அவர்தம் திருவாயில்களில் நுழையுங்கள்! புகழ்ப் பாடலோடு அவர் தம் முற்றத்திற்கு வாருங்கள்! அவருக்கு நன்றி செலுத்தி, அவர் பெயரைப் போற்றுங்கள்! ஏனெனில், ஆண்டவர் நல்லவர், என்றும் உள்ளது அவர்தம் பேரன்பு. தலைமுறைதோறும் அவர் நம்பத்தக்கவர்". (திருப்பாடல் 100:1–5)

# மரியா இறைவனின் தாய்



**ஒரு** தாயானவள் தனது பிள்ளைகள்மீது வைக்கும் பாசம் இயற்கையானது. தாய் என்றால் அன்பும் ஆதரவும், பண்பும் பாசமும், நேர்மையும் நேசமும், தியாகமும் இரக்கமும், கனிவும் ஈகையும் நிறைவாகப் பெற்றவர். இதையே கவிஞர் ஒருவர், **“ தாயன்பை எடுத்துரைக்க உலக மொழிகளில் போதிய வார்த்தைகளே இல்லை”** என்கிறார். ஆம்! சாதாரண மனிதரை ஈன்ற தாயை வருணிக்கப் போதிய வார்த்தைகளே இல்லை என்றால், விண்ணையும் மண்ணையும் எக்காலத்தும் ஆள்கின்ற கிறிஸ்து அரசரை ஈன்ற தாயை நாம் எவ்வாறு வருணிக்க முடியும். புனித அகஸ்டின், “ ஒரு மனிதரின் உடலுள்ள உறுப்புகளெல்லாம் நாக்குகளாக மாறினும் மரியன்னையை அவருடைய தகைமைக்கு ஏற்றவாறு புகழ முடியாது” என்கிறார்.

மரியா இறைவனின் தாய் என்பது திருச்சபையின் நம்பிக்கை. மரியா நம் ஒவ்வொருவரின் தாய். இதையே எலிசபெத் தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டு உரத்த குரலில், “ என் ஆண்டவரின் தாய் என்னிடம் வர நான் யார்?” என்று உரைக்கிறார். மரியா ஆண்டவரின் தாய் என்றால், உண்மையிலேயே இறைவனின் தாய். கி.பி 431ஆம் ஆண்டு எபேசில் கூடிய பொதுச்சங்கம், “ இம்மானுவேல் உண்மையிலேயே கடவுள் எனவே பேறுபெற்ற கன்னி மரியா உண்மையிலேயே இறைவனின் தாய். ஏனெனில் அவர் கடவுளிடமிருந்து பிறந்த வார்த்தையானவரை ஊனுடலில் ஈன்றெடுத்தார். மரியா உண்மையாகவே இறைவனும் மீட்பருமானவரின் தாய் என ஏற்றுக்கொள்ளப்பட்டு போற்றப்பெறுகிறார்” என்றும் சங்கம் கூறுகிறது.

அன்னை மரியா ஓர் அருளோவியம். மாசணுகாதவர். அன்பின் உறைவிடம். தாழ்ச்சியின் சிகரம். விண்ணகத்தின் வாசல். விண்ணக மண்ணக அரசி. அமல உற்பவி. இறைவனின் தாய். விண்ணிற்கு எடுத்துச் செல்லப்பட்டவர். உடன்படிக்கையின் பேழை எனப் பலவாறு அழைக்கிப்படுகின்றார். ஏறத்தாழ இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் பாலஸ்தீன நாடு உரோமைப் பேரரசு ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. அதற்குப் பல நூற்றாண்டு களுக்கு முன்னால் அந்நாட்டைத் தாவீது அரசர் ஆண்டு வந்தார். அவருடைய வழி மரபில் எளிய குடும்பத்தில் வாழ்ந்த சுவக்கீன் – அன்னா என்ற தம்பதியருக்குக் கடவுளின் தனிப்பட்ட அருளால் பாவமாசு அணுகாதவராய், சென்மப்பாவத்திற்கு உட்படாமல் மரியா, ‘ அமல உற்பவியாகப்’ பிறந்தார். சுவக்கீன் என்றால், ‘ இறைவன் தயார் செய்கின்றார்’ என்பது பொருள். அன்னா என்றால், ‘ இறைவனது அருள்’ என்பது பொருள். மரியா என்றால், ‘ வழிகாட்டும் விண்மீன்’ என்பது பொருள்.

நாம் அன்னை மரியா இறைவனின் தாய் என்றும், சிறப்பாக நம் ஒவ்வொருவரின் தாய் என்று ஏற்றுக்கொள்வோம். மரியா, கடவுள் மீது கொண்டுள்ள பேரன்பால் நம் ஒவ்வொருவரையும் அன்பு செய்கிறார் அதனால்தான்.

புனித ஜாண் பெர்க்மான்ஸ், “ ஆ! மிகவும் இனிய மாமரியே! தங்களை அதிகமாக அன்பு செய்பவர் பேறுபெற்றவர். மரியாவை நான் அன்பு செய்தால், நிச்சயம் விண்ணகத்தில் உறுதியுடனிருப்பேன். கடவுளிடமிருந்து கேட்பவற்றை யெல்லாம் பெற்றுக்கொள்வேன். நான் மாமரியை நேசிப்பேன்” என்று கூறினார்.

புனித அம்புரோஸ், “ மரியின் இனிய நாமம் எனது உள்ளத்தின் ஆழத்தில் மீட்பின் தைலமாக இறங்கட்டும்” என்று செபித்தார்.

யோவான் பெர்க்மான்ஸ், “ என்னும் நான் வாழ்நாள் முழுவதும் தூய்மையான வாழ்க்கை வாழ்வேன் என்று நற்கருணை ஆண்டவர் முன்பாக உறுதிமொழி எடுத்தார். அன்னையே உமது அமல உற்பவத்தை நம்புகிறேன். மரியே என்னைக் கைவிடாதேயும். நான் உம்முடைய மகன் எனக்கு ஆயிரம் இதயங்கள் இருந்தாலும், அவற்றால் உம்மை நேசிப்பேன்” என்று எழுதி இரத்தத்தால் கையொப்பமிட்டார்.

புனித ஜான்போஸ்கோ, “ நான் மரியாவைப் பார்க்காமல்கூட இருந்து விடுவேன். ஆனால் செபமாலை சொல்லாமல் இருக்கமாட்டேன்” என்றார். புனித கிறிஸ்சோஸ்தம் அருளப்பர், “ கடவுளின் அன்னையுமான மரியே நீர் வாழ்க. விண்ணகத்தில் வீற்றிருப்பவரும் அரியணையின்று அருள்வளங்களை வாரி இறைப்பவருமான இறை இயேசுவிடம், மரியே எமக்காகப் பரிந்து பேசி, நாங்கள் இறுதிநாள் தீர்ப்பில் மாட்டிக் கொள்ளா திருக்கவும், இறைவனை முகமுகமாகத் தரிசிக்க வரமும் பெற்றுத்தாரும்” என்று மன்றாடினார்.

புனித கிறிஸ்சோஸ்தம் அருளப்பர், கடவுளின் அன்னையுமான மரியே நீர் வாழ்க! விண்ணகத்தில் வீற்றிருப்பவரும் அரியணையின்று அருள்வளங்களை வாரி இறைப்பவருமான இறை இயேசுவிடம், **“ மரியே எமக்காகப் பரிந்து பேசி, நாங்கள் இறுதிநாள் தீர்ப்பில் மாட்டிக்கொள்ளாதிருக்கவும், இறைவனை முகமுகமாகத் தரிசிக்க வரமும் பெற்றுத்தாரும்”** என்று மன்றாடினார். இறைவனின் தாயாக, கிறிஸ்தவர்களின் சகாய அன்னையாக, மாசற்ற இரக்கத்தின் அரசியாக இருக்கின்ற அன்னை மரியாவை அதிகமாக அன்பு செய்வோம்.


## புனித பேட்ரிக் ~ மார்ச் 17



கடவுள்மீது மிகுந்த அன்பும் பக்தியும் பற்றும் நம்பிக்கையும் வைத்து வாழ்ந்தவர். இடைவிடாமல் இறைவேண்டல் செய்தவர். கிறிஸ்துவின் பாதத்தடங்களில் நடந்து நற்செய்து அறிவித்தவரே புனித பேட்ரிக். இவர் ஸ்காட்லாந்து நகரில் 385ஆம் ஆண்டு பிறந்தார். குழந்தைப்பருவத்தில் 14ஆம் வயதில் பேட்ரிக் அயர்லாந்து நகருக்கு நாடு கடத்தினார்கள். அடிமை சந்தையில் பேட்ரிக் விற்க்கப்பட்டார். அவரை வாங்கியவர் அவரை ஆடுமேய்க்க அனுப்பினார்.

இறைவன் மீது அன்பும் நம்பிக்கையும் கொண்டு இரவுநேரங்களில் கண்விழித்து செபித்தார். தனது இருபதாம் வயதில் பேட்ரிக் கனவு கண்டார். இயேசு அடிமை வாழ்விலிருந்து தப்பி அயர்லாந்துக்கு செல்ல கூறினார். பேட்ரிக் யாருக்கும் தெரியாமல் கப்பலில் பயணம் செய்து தனது பெற்றோருடன் இணைந்து வாழ்ந்தார். பேட்ரிக் குருவாக இறையாட்சி பணி செய்ய ஆவல் கொண்டார். ஜெர்மானுஸ் இவருக்கு குருத்துவ அருள்பொழிவு செய்தார். 433ஆம் ஆண்டு ஆயராக உயர்த்தப்பட்டார். பேட்ரிக் இறைவனின் துணையை பெற்று ஆர்வமுடன் நற்செய்தி அறிவித்தார். இறைமக்களின் தேவையை உணர்ந்து வழிகாட்டினார். எண்ணற்ற மக்களை மனம்மாற்றினார். நற்சான்று வழியாக மக்களை அன்பின் தாழ்ச்சியின் நீதியின் உண்மை வழியில் பயணம் செய்ய கற்றுக்கொடுத்தார். ஒப்புரவு அருள் அடையாளம் வழியாக கிறிஸ்துவின் மன்னிப்பை வழங்கினார். ஏழ்மையின் மறுவடிவமாக அன்பின் சிகரத்தில், உண்மை பாதையில் அன்பின் பணிவிடை செய்த பேட்ரிக் 461ஆம் ஆண்டு மார்ச் 17ஆம் நாள் இறந்தார்.

## புனித கௌடென்சியஸ் ~ பெப் ~ 12



உண்மையின் வழியில் பயணம் செய்து நற்செய்தி அறிவித்தவர். சொந்த நாட்டிலிருந்தும், உறவினர்களிடமிருந்து அகன்று இறைவன் காட்டிய பாதையில் பாதங்கள் பதறாமல் பயணம் செய்தவர். அன்னை மரியாவை அன்பு செய்து அன்னையின் பாதுகாப்பும் அரவணைப்பும் பெற்று வாழ்ந்தவரே புனித கௌடென்சியஸ். இவர் இத்தாலி நாட்டில் பிரெசியா என்னும் நகரில் 360ஆம் பிறந்தார். ஜெருசலேம் திருப்பயணம் செய்த தருணத்தில் ஆயர் பிலாஸ்ட்ரியுஸ் இறந்தார். இத்தருணத்தில் புனித அம்புரோஸியார் ஜெருசலேம் ஆயராக திருபொழிவு செய்தார். ஆயராக பொறுப்பேற்றவுடன் புனித பூமிக்கு பயணம் செய்து புனித பொருட்களைச் சேகரித்தார். அவற்றை ஆலயத்தில் வைத்து பாதுகாத்தார். புனித யோவான் கிறிஸ்சோஸ்தம் அவருடன் நண்பராக பழகினார். அவரின் துணையுடன் நன்மைகள் செய்த புனித கௌடென்சியஸ் 427ஆம் ஆண்டு இறந்தார்.

## புனித சூசையப்பர் மார்ச் ~ 19



திருக்குடும்பத்தின் பாதுகாவலர். குடும்பங்களின் பாதுகாவலர். நன்மரணத்திற்குப் பாதுகாவலர். உழைப்பாளர்களின் பாதுகாவலர். பொறியியலாளர்களின், பொறியியல் வேலை செய்பவர்களின் பாதுகாவலர். புண்ணியத்திலும், பக்தியிலும், மகிமையிலும், அதிகாரத்திலும் சிறந்து விளங்குவதாலும், சகல கிறிஸ்தவர்களுக்கும் அடைக்கலமும் ஆதரவுமாக இருக்கிறார். இயேசு கிறிஸ்துவின் வளர்ப்பு தந்தை ஆவார். புனித கன்னி மரியாவின் கணவராக விளங்குவதாலும், சகல கிறிஸ்தவர்களுக்கும் அடைக்கலமும் ஆதரவுமாக இருக்கிறார். யோசேப்பு நேர்மையாளர். யோசேப்பு தாவீது அரசரின் வழிமரபில் தோன்றியவர். இவரது தந்தையின் பெயர் ஏலி என்கிற யாக்கோபு ஆகும். நாசரேத்தில் வாழ்ந்து வந்த யோசேப்பு தச்சுத் தொழில் செய்து வந்தார்.

தாவீது குலத்து கன்னிப்பெண் மரியாவுடன் இவருக்கு திருமண ஒப்பந்தம் செய்யப்பட்டது. அவ்வேளையில், மரியா தூய ஆவியின் வல்லமையால் இறைமகனைக் கருத்தாங்கும் பேறு பெற்றார். மரியா திடீரென கருவுற்றதால் யோசேப்பு குழப்பம் அடைந்தார். நேர்மையாளரான இவர் மரியாவை இகழ்ச்சிக்கு உள்ளாக்காமல் மறைவாக விலக்கிவிட நினைத்தார். மரியா கடவுளின் திருவுளத்தால் இறைமகனை கருத்தாங்கி இருப்பதை வானதூதர் வழியாக அறிந்து மரியாவை ஏற்றுக்கொண்டார். இயேசு பெத்லகேம் மாட்டுத் தொழுவத்தில் பிறந்த வேளையிலும், அவரைக் கோவிலில் ஒப்புக்கொடுக்க எருசலேம் சென்ற நேரத்திலும், ஏரோது அரசன் அவரைக் கொல்லத் தேடியபோதும் மரியாவையும், குழந்தை இயேசுவையும் மிகுந்த அன்புடனும் அக்கறையுடனும் யோசேப்பு பாதுகாத்தார்.

பன்னிரண்டு வயதில் இயேசு எருசலேம் கோவிலில் தங்கிவிட்ட பொழுது, யோசேப்பு மிகுந்த கவலையுடன் தேடி அலைந்து அவரைக் கண்டுபிடித்தார். தச்சுத் தொழிலில் வந்த வருமானம் மூலம் குடும்பத்தைக் காப்பாற்றினார். மரியாவும் நெசவுத் தொழில் மூலம் இவருக்கு உதவினார். யோசேப்பு இயேசுவுக்கும் தச்சுத் தொழிலைக் கற்றுக் கொடுத்தார். மரியாவுக்கு நல்ல கணவராகவும்,. இயேசுவுக்கு நல்ல தந்தையாகவும் யோசேப்பு விளங்கினார். சிறந்த வாய்மையும் பொறுமையும் கொண்ட யோசேப்பு, திருக்குடும்பத்தை சிறப்பாகத் தலைமை தாங்கி வழி நடத்தினார். இயேசு தனது இறையரசுப் பணியைத் தொடங்குவதற்கு சில ஆண்டுகளுக்கு முன்பு, இயேசுவும் மரியாவும் அருகில் இருக்க யோசேப்பு பாக்கியமான மரணம் அடைந்தார். ★★★★★★★★★★

மனிதர் அப்பத்தினால் மட்டுமல்ல, மாறாக, கடவுளின் வாய்ச்சொல் ஒவ்வொன்றாலும் வாழ்வர். அல்லேலூயா.

# ஏழைகள் வாழ்வில் ஒளியேற்றும் இளையோர்!

## எவரை ஏழையர் என்போம்?

**மறையாசிரியர் தி. ம. சந்தியாகு வேங்கிடக்குளம், இந்தியா.**

அன்று அந்த முனிவர் தனித்திருந்தார். அவரிடம் அந்த இளைஞன் வந்து "ஐயனே எனக்கு ஓர் உந்துதல் ஏற்பட்டுள்ளது. அதன்படி என் எதிர்வரும் எவருக்கும் ஏழ்மை எந்த வடிவத்திலும் வந்துவிடக்கூடாது. அதற்கு நான் என்ன செய்ய வேண்டும்? என்ற வழியைத் தேடித்தான் நான் உம்மிடம் வந்துள்ளேன்." என்றான். அதற்கு அந்த எண்பது வயதை எட்டிய முனிவர், "இன்று போய் நாளை வா" என்றார். அவனும் அப்படியே செய்தான். ஆனால் அவரோ அங்கே இல்லை. அவன் திண்டாடினான். குழப்பத்தில் ஆழ்ந்தான். இடர்களுக்கு வடிவமோ, அளவோ, விதிகளோ இல்லவே இல்லை.

### பார்வையை மாற்றாமல் பரிதவிக்கும் நிலை

அறிஞர் ஆன்றோமன் கூறுகிறார், " புரிந்து கொள்வதைப் பிழையாக புரிந்துகொண்டு, செய்வதைத் தவறாகச் செய்து, திருத்துபவரைத் திட்டித் தீர்த்து செயல்பாட்டுக் குற்றம் செய்பவர்கள் நிறைந்திருந்தால் அங்கே இடர்களும் நிறைந்திருக்கும்" என்று, ஆம்:

அந்தப் பேருந்து நிலையத்திலிருந்து பெருநகரை நோக்கிப் புறப்பட்டது. அதில் 52 பயணிகள் பயணித்தனர். ஓட்டுனர் மூன்று மணி நேரத்திற்குப் பிறகு அதனை ஓர் உணவகத்தில் நிறுத்தினார். அப்போது அவர் நடத்துனரிடம் எல்லோரையும் விரைவாக வரச்சொல்லும்" என்றார். அந்த நடத்துனரும் தெளிவாகக் கூறினார். "எல்லோரும் இருபது நிமிடங்களுக்குள் பேருந்தில் இருக்க வேண்டும். தற்போது அரை மணி நேரம் பேருந்து தாமதமாகப் பயணிக்கிறது. பிந்தி வந்தால் யாருக்காகவும் காத்திருக்காமல் பேருந்து புறப்பட்டுவிடும்" என்று எச்சரிக்கையாகக் கூறினார்.

51 பயணிகளும் கீழே இறங்கி உணவகத்திலும் பிற இடங்களிலும் தங்களது அவசர, அவசியத் தேவைகளைப் பூர்த்தி செய்துகொண்டு சரியான நேரத்துக்கு முன்பே பேருந்துக்கு திரும்பினர். ஆனால் ஓர் ஐம்பத்தைந்து வயதான மனிதர் பேருந்திலிருந்து இறங்கவில்லை. அவர் பேருந்தின் பின்புற வழியைத் திரையினால் அடைத்துவிட்டார். ஓட்டுனர் பயன்படுத்தும் கியர் போட்டை பிடுங்கி தன் தோளில் வைத்துக் கொண்டார். முன்பக்கப் படிக்கட்டில் நின்று கொண்டிருந்தார். பேருந்தில் ஏற வந்தவர்கள், ஓட்டுனர், நடத்துனர் உள்பட பயணிகள் யாவரும் செய்வதறியாது அதிர்ச்சியுடன் நின்றனர். ஓட்டுனர் பாய்ந்து வந்து அந்த மனிதரைத் திட்டி அடிக்கப் பாய்ந்தார். ஆனால் அந்த மனிதரோ, மக்களே! மக்களே! நான் சொல்லுவதைக் காது கொடுத்துக் கவனமாய் கேளுங்கள். என்னைத் திட்டுவதற்குப் பதில் எனக்கு புகழ்மாலை சூட்டுவீர்கள். அதாவது நான் மூன்று மணி நேரமாக இந்த ஓட்டுனருக்கு அருகில் இருந்து ....... பயணித்ததை நீங்கள் அறிவீர்கள். உங்களுக்கு ஏற்பட்டிருந்த தேவைகளைப் போல் எனக்கும் கீழே இறங்கிச் செய்ய வேண்டிய வேலைகள் நிறைய இருந்தன. ஆனால் நான் அவற்றைத் திடமனத்துடன் பொறுத்துக் கொண்டு தீயாக சிந்தனையில் இச்செயலைச் செய்தேன்.

இந்த ஓட்டுனர் மூன்று மணி நேரமாக இந்தக் கியர் போட்டை அசைத்தார், ஆட்டினார், உயர்த்தினார், தாழ்த்தினார் இதனை இவரால் பிடுங்க முடியவில்லை. நான் இந்தப் பேருந்து விரைவாகவும், பத்திரமாகவும் பயணிக்க இடையூறாக அதுவும், ஓட்டுனர் எவ்வளவு முயற்சித்தும் பிடுங்க முடியாத இதனை, மூன்றே நிமிடங்களில் முன்மதியோடு முனைந்து செயல்பட்டு பிடுங்கிவிட்டேன். இப்போது சொல்லுங்கள் நான் செய்தது மிகவும் பயனுள்ள நேர்த்தியான செயல் அல்லவா! எல்லோரும் வாருங்கள் இனிதே பயணிப்போம்! என்றார். எல்லோரும் "கொல் " என்று சிரித்தனர்.

ஆம் அந்த மனிதர் மிகவும் நல்லவர். எல்லோருக்கும் உதவி செய்ய நினைப்பவர். தனது சொந்தத் தேவைகளைக் கூட நிறைவேற்றிக் கொள்ளாமல், உதவத் தன்னை அர்ப்பணித்தவர். ஆனால் அவர் தவறாகப் புரிந்துகொண்டார். யாரிடமும் ஆலோசிக்கவில்லை. நேரத்தையும் பேருந்தின் பயணத்தையும் வீணடித்தார். பேருந்து இப்போது பயணிக்க முடியாத நிலை. பணியாளர்கள் வரவழைக்கப்பட்டனர். பழுது நீக்கப்பட்டது. அந்த அதீதச் செயல் புரிந்த அறியாத அற்புத மனிதரை அனைவரும் மன்னித்தனர். பேருந்து பெருநகரை நோக்கிப் புறப்பட்டது. ஆம் அந்த மனிதரின் பார்வையில் பிழை இருந்தது. அவரும் மாற்றிக்கொள்வதாகக் கூறினார். பார்வையில் ஏழையாயிருக்கும் பலர் நம்மிடையே வாழ்ந்து வருகின்றனர்.

### இயேசு காலத்தர் ஏழையர்

இயேசு மத்தேயு 5:3, லூாக்கா 4:16, 6:20 ஆகிய பகுதிகளில் பயன்படுத்தும் 'ஏழையர்' என்ற சொல்:

- உண்ண உணவில்லாதவர்களை ,
- உடுக்க உடையில்லாதவர்களை ,
- இருக்க இடமில்லாதவர்களை,
- வாழ வழியில்லாதவர்களை

மட்டும் குறிப்பதாக இல்லை மாறாக அவர்கள்

- குணப்படுத்த முடியாத நோயுற்றவர்களாகவும்,
- நீதியை அனுபவிக்க முடியாத வறியவர்களாகவும்,
- தம் சொல்லை ஏற்றுக்கொள்ளாது கல்மனத்தோராய்க் காண்பவர்களாகவும் ,
- பசியாலும், துன்பத்தாலும் பரிதவிப்பவர்களாகவும் இருந்தனர்.

மேலும் இறைவாக்கினர் ஆமோஸ் கூறுவது போல் நசுக்கப் பட்டவர்களாகவும், இறைவார்த்தை அறிவிக்கப்படாத வார்த்தைப் பஞ்சத்தை அனுபவிப்பவர்களாகவும், உழைப்பைச் சுரண்டும் ஊடுருவக்காரர்களுக்கு ஒத்துப் போகிறவர்களாகவும் அநீத ஆட்சியாளர்களால் தலையெடுக்க முடியா அளவுக்குத் தாழ்த்தப்பட்டவர்களாகவும் இருந்தனர். இன்னும் இயேசு மக்களினத்தார் அனைவருக்கும் தீர்ப்பு என்ற பரப்புரையில் (மத்தேயு 25:35 –36) குறிப்பிடும் பசி, தாகம், ஆடையற்ற நிலை, நோயுற்றிருத்தல், சிறையிலிருத்தல் ஆகிய அனைத்துமே ஒருவரை ஏழையாய்ப் பார்க்கும் நிலைப்பாடுதான். இவை தவிர இன்னும் ஏராளமான ஏழ்மை நிலைகளைக் குறிப்பிடலாம். அமைதியின்மை, நல்லறிவின்மை, நல்லுறவின்மை, நியாயமாக பிறர் பழிப்புக்குள்ளாகும் கையறுநிலை, தூக்கமின்மை, பசியின்மை, ஏற்றுக்கொள்ளப்படாமை, ஏற்றத்தாழ்வில் சிக்குண்டு சின்னா பின்னமாதல் சாதி, சமய, மொழி, நாட்டு வேறுபாடுகளால் ஒரங்கட்டப்படும் ஆணவநிலை இவையெல்லாமே ஏழ்மையின் வெளிப்பாடுகள்தான். இவற்றைக் கண்டுதான் இயேசு வெகுண்டெழுந்தார், இறைவேண்டல் செய்தார், தேடிச் சென்றார், தெய்வமாய்க் காட்சியளித்தார். புனித பவுல் கூறுவதுபோல எல்லாருக்கும் எல்லாருமானவர்.

**ஒளியேற்றும் பணிக்கு ஒய்யாரமாய் அழைக்கப்படும் இளையோர்.**

இன்றைய இளையோரை சமூகவியலார் ஆறு பிரிவினராக வகுக்கின்றனர்.

- குறிப்பான, சிறப்பான இலக்கின்றி இப்ப எனக்கு இது தேவை. இதை நான் அடைந்து அனுபவித்தால் போதுமென்பவர்கள்
- மேலோர் என பிறரை நினைத்து அவர்கள் சொல்வதைச் செய்து ஓகே ஆகிவிட்டால் போதும் எனக் கருதுபவர்கள்.
- எனக்கென்று ஒரு விதியை ஆண்டவன் விதித்துள்ளான். அதுபோல அவனவனுக்கும் 'ஒரு விதி' இருக்கிறது. அதன் படி அவனுக்கு நேருகின்றது. இதில் எனது கருத்தோ, தலையீடோ தேவையில்லை என எண்ணி ஒதுங்கி வாழ்பவர்கள்.
- ஓர் உயர்ந்த குறிக்கோளை, அதாவது
  **"கான முயல்எய்த அம்பினில், யானை பிழைத்தவேல் ஏந்தல் இனிது" (குறள்:112)**
  என்ற குறளின்படி சிறிய விலங்கினை வேட்டையாடச் சென்று விலங்கைப் பிடித்து வருவதைவிட யானை வேட்டைக்குப் போய் கையிலிருக்கும் வேலையைக் கூட இழந்து வருவது போற்றுதற்குரியது என்ற இலக்கில் பெரிய உன்னதமான இலக்கைக் குறித்துப் பயணித்து வெற்றி வாகை சூடுபவர்கள்.
- துன்ப, துயர், பேரிடர் எங்கே யாருக்கு நேர்ந்தாலும் அநீதி செய்வோரால் அவதிப்படுத்தப்படுவோரைப்பார்த்து உடனடியாகச் செயலில் இறங்கி உதவி வெற்றி கண்டு மகிழ்பவர்கள்.
- இறை வேண்டலே எல்லாவற்றையும் இனிதே முடித்து விடும் என்பது அளவுக்கதிகமான இறை நம்பிக்கையில் வாழ்ந்து வெற்றி பெறாதபோது இறைவனையே குறை கூறுபவர்கள்.

இம் இத்தனை வகையோரில் நீங்கள் எந்தப்பிரிவு? தனிப் பிரிவா? நீங்கள் எந்தப் பிரிவினராயிருப்பினும் உங்களுக்குள்ள சமூகக் கடமை, குடும்பம், திரு அவைக் கடமைகள் உங்களை உள்ளன்போடு அழைக்கின்றன. முடிந்த நலன்களைச் செய்து எல்லோர் வாழ்விலும் குறைந்த அளவுக்கு ஏழையர் வாழ்விலும் ஒளியேற்ற வாருங்கள்.

**அன்புடன் மறையாசிரியர் சந்தியாகு**

## புதியதாய் பிறக்கின்ற ஆண்டே......

**உன்னை**
**ஆசித்து**
**வரவேற்க**
**அரியதாய்**
**ஏதேனும்**
**செய்தேனா?**

**எண்ணிப் பார்க்கையில் என் காயங்கள் கரைக்கின்றன.**

**தோல்விகள் துரத்துகின்றன.**

**இயலாமை என்னை ஏளனம் செய்கிறது**

**அடங்காத ஆசைகள் ஆட்டிப் படைக்கின்றன.**

**சேராத உறவுகள் சோகத்தைத் விதைக்கின்றன.**

**தவறவிட்ட அவகாசங்கள் சேர்ந்து சிரிக்கின்றன**

**அடைய தவறிய இலக்கு அச்சுறுத்துகின்றது.**

**அமைதியாய் ஆலோசிக்கின்றேன்.**

**புதிதாய் புலர்ந்து விட்ட புத்தாண்டே உன்னை வரவேற்க நான் தயாரா?**

ஏழையரின் உள்ளத்தோர் பேறுபெற்றோர்.ஏனெனில் விண்ணரசு அவர்களுக்கு உரியது.அல்லேலூயா. (மத்5:3)

# சகல புனிதர்கள் பெருவிழா ~ 2025





# வீடற்ற வறியோர் முதியோர்க்கு இளையோரின் உதவி செய்தல்~ 2025




















## மீட்பின் பாதை

(ஆன்மீக உண்மைச் சிறுகதை)



அன்று இரவு 2மணி ஆகியும் தூக்கம் கண்களை தழுவ மறுத்ததால் படுக்கையை விட்டெழுந்து நாளைக்கு எத்தனை பேரிடம் வரிப்பணம் வசூலிப்பது? அவர்களின் சொத்துக்களை எப்படி அபகரிப்பது? என்று யோசித்தவாறே இங்கும் அங்குமாக நடந்து கொண்டிருந்தார் அந்த குள்ள மனிதன் சகேயூ.

அன்பு, இரக்கம், இறைபக்தி, பிறசினேகம் என்றால் என்ன? என்றே தெரியாமல் அனேக பாவச்செயல்களை செய்து வாழ்ந்த போதிலும், தான் செய்வது தவறு என்பதை உணராது தன் மனம் போன போக்கில் வாழ்ந்து கொண்டிருக்கும் இவரை! பாவம் இல்லா தூய வாழ்வில்! இறைவனுக்கு ஏற்புடைய பக்திமானாகவும், நற் பண்பாளராகவும் மாற்ற தூய ஆவியானவர் முன் வந்து, தம் வல்லமையை இவர் மேல் பொழிந்தார். அத்தருணமே தன் சிந்தையிலே மாற்றம் பெற்று ! நல் மனிதராக வாழும் அரிய வாய்ப்பு இவருக்கு கிடைத்தது.

மறுநாள் எரிகோ நகர் வழியாக இயேசு வருகிறார் இவர் பற்பல வியாதிகளை குணமாக்கி அரும்பெரும் அருள் அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்கின்றார். குருடர் பார்க்கின்றனர். – செவிடர் கேட்கின்றனர் முடவர் நடக்கின்றனர்.

அனைவரின் பாவங்களையும் மன்னித்து சகலரையும் தம் மீட்பின் பாதையில் வழி நடத்துகிறார் என்ற செய்தி இவருக்கு எட்டுகின்றது. உடனே இன்று எப்படியாவது அவரைப் பார்த்து விடவேண்டும் என்ற அக்களிப்போடு! எரிகோ நகருக்கு விரைகின்றார்.

வீதியெங்கும் ஒரே ஜனக்கூட்டமாக இருந்தபடியால் தான் குள்ளமாக இருப்பதால் இயேசுவை எப்படி பார்க்க முடியும் ? என்று நினைத்த மாத்திரத்தில் அவ்வீதியில் நின்ற ஓர் காட்டு அத்தி மரத்தின் கிளையைப்பிடித்து தாவி ஏறி நின்று கொண்டு! இங்கும் அங்குமாக இயேசுவைத் தேடுகின்றார். ஏற்ற வேளையில் இயேசு வருவதைப் பார்த்ததும்! « **இரக்கம் உள்ள தந்தையே! எரிகோ நகர மீட்பரே ! உம்மை பார்க்கும் பாக்கியம் இன்றே எனக்குக் கிடைத்தது, இதுவே எனக்குப் போதுமே! பாவி என்னை மன்னியும் பரிதவித்து நிக்கின்றேன்** » என்று கூச்சலிட்டார்.

சற்று நேரத்தில் இயேசு சகேயூ அமர்ந்திருந்த மரத்தை அண்மித்தும் « **விரைவில் வாரும் அன்பரே ! இன்று உமது வீட்டில் தங்கிட வாஞ்சை கொண்டே உம்மை அழைக்கின்றேன்** » என்று ஆண்டவரின் குரலைக் கேட்டதும் ! உள்ளம் நெகிழ்ந்த சகேயூ....

**« பாவியான என்னையா பரிவு கொண்டு அழைக்கின்றீர்? இதோ! விரைந்து வருகிறேன். நேசம் உள்ள தந்தையே! பிறரை இழிவு படுத்தினேன், பொய் குற்றங்களும் சுமத்தி னேன், அவர் பொருட்கள் எல்லாமே எனக்கு என்று அகந்தையிலே வாழ்ந்திட்டேன். நான் செய்து கொண்ட பாவங்கள் வெகுவாய் இன்று என்னைக் கொல்லுதே! என் இரக்கத்தின் தேவனே ! என் பிழை பொறுத்தே என்னை மன்னியும் »**

என்று இயேசுவின் பாதத்தில் வீழ்ந்து மனம் உருகி கதறினார். அப்போது சகேயூ மீது பரிவு கொண்ட இயேசுவோ! இவரை கட்டித் தழுவியவாறு இன்று இவ் வீட்டுக்கு மீட்பு உண்டு என்று சகேயூவைத் தேற்றுகையில் !

**ஆண்டவரே! உம் மீட்பின் பாதை எது என்று**
**இன்றே நான் உணர்ந்திட்டேன்.**
**இனி பசித்தோர்க்கு உதவிடுவேன்.**
**பகை மறந்து வாழ்ந்திடுவேன்.**
**பிறர் பொருளை கவர்ந்ததால்.. பன் மடங்காய் அதை திருப்பிக் கொடுக்கின்றேன்.**
**ஏழை எளியோர் நலனுக்காய் உதவிக் கரம் நீட்டுவேன்.**
**அனைவருக்கும் நல் நண்பனாய், ஐக்கியமாய் நான் வாழ்ந்திட ஏற்ற வரம் தந்தவரே!**
**நான் வாழும் காலம் யாவுமே உம் மீட்பின் பாதை.**
**எனக்கு வழிகாட்டுமே?**

என்ற மனநிறைவோடு தன் பயணத்தைத் தொடர்ந்தார் சகேயூ.

எனவே! நீங்களும் ஆண்டவருடைய மீட்பின் – பாதை யில் நிறைவுடன் வாழ முயலுங்கள். (லூக்,19,) ஐ வாசியுங்கள். மீண்டும் மற்றுமொரு ஆன்மீக உண்மைச் சிறுகதையுடன் உங்களை சந்திக்கும் நான்......

உங்கள் பாசத்துக்குரிய லூசியா அன்ரி.

## டிட்வா புயலினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவி



டிட்வா புயலால் பாதிக்கப்பட்ட கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவிற்குட் பட்ட மக்களுக்கு மிருசுவில் பங்கு மக்கள் தமது உதவிகளை வழங்கியுள்ளனர்.

பங்குத்தந்தை அருட்தந்தை ஞ. து. ஞ. ஜெயரஞ்சன் அவர்களின் ஒழுங்குபடுத்தலில் பங்கு மக்களிடம் சேகரிக்கப்பட்ட 1, 15 000 ரூபாய் பணத்தொகை மார்கழி மாதம் 16ஆம் திகதி கடந்த செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட தர்மபுரம் பங்கின் பங்குத்தந்தை அருட்தந்தை றெனால்ட் அவர்களிடம் கையளிக்கப்பட்டது.




## பெரியதை எடு! பெரியதை எடு!!

உழவன் ஒருவன் வீட்டில் வெள்ளாடும், செம்மறி ஆடும் இருந்தன. அவை இரண்டும் நெருங்கிய நண்பர்களாக இருந்தன. எங்கே சென்றாலும் ஒன்றாகவே சென்றன. தோட்டத்தில் விளையும் செடிகளை எல்லாம் அவை கடித்து நாசம் செய்தன. கோபம் கொண்ட உழவன், நீங்கள் இனிமேல் இங்கே இருக்கக் கூடாது. இருந்தால் உங்களைக் கொன்று விடுவேன். எங்காவது போய் விடுங்கள், என்று விரட்டினான்.

இரண்டு ஆடுகளும் தங்கள் பொருள்களை ஒரு சாக்குப் பையில் போட்டன. அந்தப் பையைத் தூக்கிக் கொண்டு புறப்பட்டன. செம்மறி ஆடு வலிமை உள்ளதாகவும் கோழையாகவும் இருந்தது. மாறாக வெள்ளாடோ வீரத்துடன், ஆனால் வலிமை இல்லாமல் இருந்தது. சிறிது தூரம் நடந்த இரண்டும் ஒரு வயலை அடைந்தன. அங்கே இறந்து போன ஓநாய் ஒன்றின் தலை கிடந்தது. அந்த ஓநாயின் தலையை எடுத்துக் கொள். நீதான் வலிமையுடன் இருக்கிறாய் என்றது வெள்ளாடு. என்னால் முடியாது நீதான் வீரன். நீயே எடு, என்றது செம்மறி ஆடு. இரண்டும் சேர்ந்து அந்த ஓநாயின் தலையைச் சாக்கிற்குள் போட்டுத் தூக்கிக் கொண்டு நடந்தன. சிறிது தொலைவில் நெருப்பு வெளிச்சத்தை அவை பார்த்தன. அந்த நெருப்பு எரிகின்ற இடத்திற்குப் போவோம். குளிருக்கு இதமாக இருக்கும். ஓநாய்களிடம் இருந்தும் நாம் தப்பித்துக் கொள்ளலாம், என்றது வெள்ளாடு. இரண்டும் அந்த இடத்தை நோக்கி நடந்தன. அருகில் சென்றதும் அவை அதிர்ச்சி அடைந்தன. அங்கே மூன்று ஓநாய்கள் உணவு சமைத்துக் கொண்டிருந்தன.

ஓநாய்கள் தங்களைப் பார்த்து விட்டன. தப்பிக்க வழியில்லை என்பதை உணர்ந்தன ஆடுகள். நண்பர்களே! நீங்கள் நலந்தானே என்று தைரியத்துடன் கேட்டது வெள்ளாடு. அச்சத்தால் செம்மறி ஆட்டின் கால்கள் நடுங்கின. நண்பர்களா நாங்கள்? எங்கள் உணவு தயார் ஆகட்டும். அதன் பிறகு உங்களைக் கவனிக்கிறோம். எங்கே ஓடிவிடப் போகிறீர்கள்? என்றது ஒரு ஓநாய். இவற்றிடம் இருந்து எப்படித் தப்பிப்பது என்று சிந்தித்தது வெள்ளாடு. செம்மறி ஆடே! இன்று நாம் கொன்றோமே ஓநாய்கள். அவற்றில் ஒன்றின் தலையை எடுத்து இவர்களிடம் காட்டு. நாம் யார் என்பது புரியும்? என்று உரத்த குரலில் சொன்னது அது. செம்மறி ஆட்டிற்கு அதன் திட்டம் புரிந்தது. சாக்கிற்குள் கையை விட்டு ஓநாயின் தலையை எடுத்தது. ஏ! முட்டாள் ஆடே! பெரிய ஓநாயின் தலையை எடுத்துக் காட்டு என்றேன். நீ சிறிய தலையை எடுத்துக் காட்டுகிறாயே, பெரியதை எடு, என்று கத்தியது வெள்ளாடு. அந்தத் தலையைச் சாக்கிற்குள் போட்டது செம்மறி ஆடு. மீண்டும் அதே தலையை வெளியே எடுத்துக் காட்டியது. கோபம் கொண்டது போல் நடித்தது வெள்ளாடு. இருக்கின்ற ஓநாய்த் தலைகளில் பெரியதை எடு. மீண்டும் நீ சிறிய தலைகளையே எடுத்துக் காட்டுகிறாய். இதைப் போட்டுவிட்டு பெரிய தலையாக எடு, என்று கத்தியது. அந்தத் தலையைப் போட்டுவிட்டு அதே தலையை மீண்டும் வெளியே எடுத்தது செம்மறி ஆடு. இதைப் பார்த்த மூன்று ஓநாய்களும் நடுங்கின. இவை சாதாரண ஆடுகள் அல்ல. நீ அவற்றைக் கேலி செய்திருக்கக் கூடாது. சாக்கிற்குள் இருந்து ஒவ்வொரு ஓநாய்த் தலையாக எடுக்கின்றன, என்றது ஒரு ஓநாய். மூன்றும் சிறிது நேரம் அமைதியாக இருந்தன. ஆடுகளைப் பார்த்து ஓநாய் ஒன்று, உங்களைச் சந்தித்ததில் மிக்க மகிழ்ச்சி, குழம்பு நன்றாகக் கொதிக்கிறது, இன்னும் சிறிது தண்ணீர் ஊற்ற வேண்டும், நான் சென்று தண்ணீர் கொண்டு வருகிறேன், என்று புறப்பட்டது. சிறிது நேரம் சென்றது. இரண்டாவது ஓநாய், அந்த ஓநாயிற்கு நம் அவசரமே தெரியாது. போய் எவ்வளவு ஆகிறது? நான் சென்று அழைத்துக் கொண்டு தண்ணீருடன் வருகிறேன், என்று புறப்பட்டது. பரபரப்புடன் இருந்த மூன்றாவது ஓநாய் இருவரும் எங்கே தொலைந்தார்கள்? நான் சென்று அழைத்து வருகிறேன் என்று புறப்பட்டது. தப்பித்தோம் என்ற மகிழ்ச்சியில் ஓட்டம் பிடித்தது.

செம்மறி ஆடே! நம் திட்டம் வெற்றி பெற்று விட்டது. ஓநாய்களிடம் இருந்து தப்பித்து விட்டோம். விரைவாகச் சாப்பிட்டுவிட்டு இங்கிருந்து புறப்படுவோம். உண்மை தெரிந்து மீண்டும் அவை இங்கே வரும், என்றது வெள்ளாடு. இரண்டும் அங்கிருந்த உணவை வயிறு முட்ட உண்டன. மகிழ்ச்சியுடன் ஏப்பம் விட்டுக் கொண்டே புறப்பட்டன. ஓடிய மூன்று ஓநாய்களும் வழியில் சந்தித்தன. ஆடுகளுக்குப் பயந்தா நாம் ஓடி வருவது? என்று கேட்டது ஒரு ஓநாய். நம்மை அவை ஏமாற்றி இருக்கின்றன. நாமும் ஏமாந்து விட்டோம், என்றது இன்னொரு ஓநாய். மூன்றாவது ஓநாய், நாம் உடனே அங்கு செல்வோம், அவற்றைக் கொன்று தின்போம், என்றது. மூன்று ஓநாய்களும் அங்கு வந்தன. உணவை உண்டு விட்டு இரண்டு ஆடுகளும் ஓடி விட்டதை அறிந்தன. ஏமாந்து போன ஓநாய்கள் பற்களை நறநறவென்று கடித்தன. பாவம் அவற்றால் வேறு என்ன செய்ய முடியும்?

## ஆர்ஜென்தைல் பணித்தளத் திருவிழா ~ 2025



## பினோய் ~ மெனில் பணித்தளத் திருவிழா ~ 2025



# ஆன்மீகப் பணியகத்தின் 36 வது திருவிழா ~ 2025



## ஆன்மீகத்தின் அருட்பணித் திட்டமிடல் ~ 2025



## மனிதனின் வாழ்நாள் குறைந்து கொண்டே போகிறது

1. ஆதாமின் வாழ்நாள் 930 அண்டுகள் தொடட. நூல் 5:15
2. சேத்துவின் வாழ்நாள் 912 ஆண்டுகள் தொ. நூல் 5:8
3. ஏனோசின் வாழ்நாள் 915 ஆண்டுகள் தொ. நூல் 5:11
4. கேனாசித் வாழ்நாள் 910 ஆண்டுகள் தொ. நூல் 5:14
5. மகலலேல் வாழ்நாள் 895 ஆண்டுகள் தொ. நூல் 5:17
6. ஏரோது வாழ்நாள் 962 ஆண்டுகள் தொ. நூல் 5:20
7. ஏனோக்குவாழ்நாள் 365 ஆண்டுகள் தொ. நூல் 5:23
8. மத்துசேலா வாழ்நாள் 969 ஆண்டுகள் தொ. நூல் 5:27
9. இலமேக்கு வாழ்நாள் 777 ஆண்டுகள் தொ. நூல் 5:31
10. நோவா வாழ்நாள் 950 ஆண்டுகள் தொ. நூல் 9:29
11. சேம் வாழ்நாள் 600 ஆண்டுகள் தொ. நூல் 11:10–11
12. அர்பகசாது வாழ்நாள் 460 ஆண்டுகள்தொ. நூல் 11:12–13
13. செலவாகு வாழ்நாள் 460 ஆண்டுகள் தொ. நூல் 11:14–15
14. ஏபேர் வாழ்நாள் 664 ஆண்டுகள் தொ. நூல் 11:16–17
15. பெவரு வாழ்நாள் 239 ஆண்டுகள் தொ. நூல் 11:18–19
16. இரயு வாழ்நாள் 239 ஆண்டுகள் தொ. நூல் 11:20–21
17. செருக வாழ்நாள் 230 ஆண்டுகள் தொ. நூல் 11:22–23
18. நானோர் வாழ்நாள் 148 ஆண்டுகள் தொ. நூல் 11:24–25
19. தெராகு வாழ்நாள் 205 ஆண்டுகள் தொ. நூல் 11:32
20. ஆபிரகாமின் வாழ்நாள் 175 ஆண்டுகள் தொ. நூல் 25:7
21. ஈசாக்கு வாழ்நாள் 180 ஆண்டுகள் தொ. நூல் 35:28



## சார்லி சப்ளின் கூறிய நகைச்சுவை மன்னன் 25 தத்துவங்கள்

- இந்த உலகில் எதுவும் நிரந்தரமில்லை உங்கள் பிரச்சினைகள் உட்பட.
- சிரிக்கத் தவறும் ஒவ்வொரு நாளும் பயனற்றது.
- சிரிப்புத்தான் வலிக்கு மருந்து. சிரிப்புத்தான் வலிக்கு நிவாரணம். சிரிப்புத்தான் உன் வலியை தீர்த்து வைக்கும்
- கனவுகள் எல்லாம் நனவாகும், நிறைய காயங்களுக்குப் பிறகு.
- உன் மனம் வலிக்கும் போது சிரி. பிறர் மனம் வலிக்கும் போது சிரிக்க வை.
- இதயம் வலித்தாலும் சிரி. அது உடைந்தாலும் சிரி.
- என் வலி சிலருக்கு சிரிப்பைத் தரலாம். ஆனால் நிச்சயம் என் சிரிப்பு யாருக்கும் வலியைத் தராது.
- எனக்கு நிறைய பிரச்சினைகள் உண்டு, ஆனால் என் உதட்டுக்கு அதெல்லாம் தெரியாது, அது சிரித்துக் கொண்டுதானிருக்கும்.
- பணம் நமக்கு எல்லாவற்றையும் கொடுக்கலாம். ஆனால் வறுமை நம்மிடம் இருந்து பறித்த சிலவற்றை பணத்தால் திருப்பித் தர முடியாது
- கண்ணாடி என் நண்பன் எனென்றால் நான் அழும்போது அது சிரிப்பதில்லை.
- ஆசைப்படுவதை மறந்துவிடு. ஆனால் ஆசைப்பட்டதை மறந்து விடாதே.
- உன் வேதனை பலரை சிரிக்க வைக்கலாம். ஆனால் உன் சிரிப்பு ஒருவரைக் கூட வேதனைப்படுத்தக் கூடாது.
- போலிக்கு தான் பரிசும் பாராட்டும். உண்மைக்கு ஆறுதல் பரிசு மட்டுமே
- எப்போதும் மழையில் நனைந்தபயே நடக்கப் பிடிக்கிறது. என் கண்களில் கண்ணீரை யாரும் பார்க்க முடியாது என்பதால்
- நீ எப்போதும் வானவில்லைக் காண முடியாது. உன் பார்வை கீழ் நோக்கியே இருந்தால்.
- நண்பர்களின் சிரிப்பைப் பார்க்கும்போது கண்ணீரை மறக்கிறேன். நண்பர்களின் கண்ணீரைப் பார்க்கும்போது சிரிப்பை மறக்கிறேன்.
- வாழ்க்கை அர்த்தம் தேடிக்கொண்டிருப்பதற்கல்ல, அனுபவிப்பதற்கு.
- நீ மகிழ்ச்சியாய் இல்லாத போது வாழ்க்கை உன்னைப் பார்த்து சிரிக்கிறது. நீ மகிழ்ச்சியாய் இருக்கும் போது உன்னைப் பார்த்து புன்னகை செய்கிறது. ஆனால் நீ அடுத்தவரை மகிழ்ச்சிப்படுத்தும் போது வாழ்க்கை உன்னை வணங்குகின்றது.
- உங்களை தனியாக விட்டாலே போதும். வாழ்க்கை அழகானதாகத்தான் இருக்கும்.

எங்களுக்கு வெற்றி தாரும்! ஆம், நாங்கள் செய்பவற்றில் வெற்றியருளும்! திபா 90:17




மாட்டுப்பொங்கல் என்பது, தமிழர்களால் தைப்பொங்கலுக்கு மறுநாள் கொண்டாடப்படும் பண்டிகை ஆகும். இது பட்டி பொங்கல் அல்லது கன்று பொங்கல் என்று அழைக்கப்படுகிறது. உழவுக்கு உயிரூட்டும் விதமாக விவசாயத்திற்கு பயன்படும் மாடுகளை போற்றி, அவைகளுக்கு நன்றி செலுத்தும் விதமாக மாட்டுப்பொங்கல் விழா கொண்டாடப்படுகிறது.

அதாவது, விவசாயத்திற்காக உழைத்த கால்நடைகளை போற்றி நன்றி கூறும் நோக்கோடு பொங்கல் பொங்கி, விருந்து படைத்து, நன்றி கடன் செய்யப் பெறும் நிகழ்வே மாட்டும் பொங்கலாகும்.

மாட்டுப்பொங்கல் அன்று வேளாண்மைக்கு உதவும் மாடுகளை குளிப்பாட்டி மாலை அணிவித்து, அதன் கொம்புகளுக்கு வண்ணம் தீட்டி, கொம்பில் குஞ்சம் அல்லது சலங்கை கட்டி, தீப ஆராதனை காண்பித்து வழிபடுவார்கள், செய்வார்கள். மேலும், மாட்டு தொழுவத்தையும் சுத்தம் செய்து, அந்த இடத்தில் மாடு படங்களை வரைந்து, மாட்டு தொழுவத்திலும் சாம்பிராணி, தீப ஆராதனை காட்டுவார்கள். அதன் பிறகு, சர்க்கரை பொங்கல் மற்றும் வெண் பொங்கல் வைத்து, அதனுடன் பழ வகைகள் மற்றும் செங்கரும்பு வைத்து படைத்து, அதனை மாடுகளுக்கு ஊட்டி விடுவார்கள்.

கிராமங்களில் ‘ பொங்கலோ பொங்கல் மாட்டு பொங்கல் பட்டி பெருக, பால் பானை பொங்க நோவும் பிணியும் தெருவோடு போக’ என்று கூறி கையில் தட்டு தாளம் அடித்து, வீட்டினை மூன்று முறை சுற்றி வந்து வழிபாடுவார்கள். அதேபோல், உழவுக்கு பயன்படும் கருவி களையும் கழுவி சுத்தம் செய்து துடைத்து, குங்குமம், சந்தனம் வைத்து அவற்றிக்கு தீப ஆராதனை காட்டி வழிபாடு செய்வார்கள். மத்தளம் அடித்து, மாடுகளை அனைத்தும், அந்த ஊரில் உள்ள குளம் அல்லது ஆற்றிற்கு அழைத்து சென்று குளிப்பாட்டி அங்கு பூஜை செய்து மீண்டும் வீட்டிற்கு அழைத்து வருவார்கள். கிராமப்புறங்களில், வீடுகளில் மாடு இல்லாதவர்கள், அருகில் மாடு வைத்திருக்கும் வீடுகளுக்கு சென்று மாட்டு பொங்கலை கொண்டாடுவார்கள்.

**ஆறு மாதம் அன்னையின் முலைப்பால் அருந்தினோம்...**
**ஆயுள் முழுவதும் உந்தன் மடிப்பால் அருந்தினோம்...**
**எங்களின் இரண்டாம் தாயும் நீயே...**
**குடும்பம் செழிக்க உதவும் கோமாதாவும் நீயே...**
**உன்னை வணங்கவே உனக்கொரு பண்டிகை.!**

# வேதியர். பேரா.தி.ம. சந்தியாகுவின் வேதியர் பணியில் ~ 50 ஆண்டுகள்

## பொன்விழா

சுமார் 20 ஆண்டுகளுக்கும் மேலாக முப்பணி மையத்தில் பணியாற்றி வரும் வேதியர். பேரா. தி. ம. சந்தியாகுவுக்கு வேதியர் பணியில் 50 ஆண்டுகள் நிறைவுறும் இவ்வேளையில் அவருக்குப் பொன்விழாக் கொண்டாடுவது என நிர்வாகக் குழுவில் மேற்கொண்ட முடிவின்படி 01. 11. 2025 அன்று (சனிக்கிழமை) அவ்விழா தமிழக முப்பணி மையத்தில் (TNBCLC) நடைபெற்றது.

காலை 10:45 மணியளவில் தமிழக முப்பணி மையத்தின் தலைவரும் புதுவை–கடலூர் உயர் மறைமாவட்டப் பேரா யருமான மேமிகு பிரான்சிஸ் கலிஸ்ட் அவர்கள் விழா நாயகருக்கு சந்தன மாலை அணிவித்தார். அவர் தலைமையில் விழா கூட்டுப்பாடல் திருப்பலி நடைபெற்றது. இதில் இந்திய தேசிய திருவிவிலிய அருள்பணிக்குழுவின் தலைவரும் கேரளா சுல்தான் பேட்டை மறைமாவட்ட ஆயருமான மேதகு பீட்டர் அபீர் மறையுரையாற்றினார். கும்பகோணம் மேனாள் ஆயர் மேதகு கு. அந்தோணிசாமி திருப்பலியில் பங்கேற்றார் 18 அருள்பணியாளர்கள் இத்திருப்பலியில் இணைந்து நிறைவேற்றினர். திருப்பலிக்குப்பின் 12:15 மணிக்கு பொன் விழா வாழ்த்துக் கூட்டம் நடைபெற்றது. தமிழக திருவிவிலிய அருள் பணிக்குழுப் பொதுச் செயலர் அருள்பணி. ஞ. மைக்கில்ராஜ் நிகழ்ச்சியை நிரல்படுத்தி வரவேற்புரை ஆற்றினார். திருப்பலியில் முன்னுரை வழங்கிய முப்பணி மைய இயக்குனர் அருள்பணி. யு. ஜான் பிரிட்டோ பாக்கியராஜ் ஆயர்களுக்கும் விழா நாயகருக்கும் பொன்னாடை போர்த்தினார். விழா நாயகர் ஆயர்களுக்குப் பொன்னாடை போர்த்திப் பரிசளித்தார்.

தொடர்ந்து கும்பகோணம் மறைமாவட்ட மேனாள் ஆயர் மேதகு கு. அந்தோனிசாமி தனது வாழ்த்துரையை வழங்கினார். பின்னர் விழா நாயகருக்கு முப்பணி மையத் தந்தையர் இணைந்து அன்பளிப்பு வழங்கினர். உடனே முப்பணி மையத்தின் சார்பில் தமிழக திருவழிபாட்டு அருள் பணிக்குழுவின் பொதுச்செயலர் அருள்பணி. ஞ. எம்மானுவேல் வாழ்த்துரை வழங்கினார். பின்னர் தமிழக மறைக்கல்வி அருள்பணிக்குழுவின் பொதுச்செயலர் பெனடிக்ட் ஆ.னு ஆனலின் அவர்களின் தலைமையில் தமிழக முப்பணி மையத்தின் பணியாளர்கள் இணைந்து வாழ்த்துப் பாடல் பாடினர். தொடர்ந்து தஞ்சை மறைமாவட்ட பன்னோக்கு சேவைச் சங்கச் செயலரும் விழா நாயகரின் பிறந்த மண்ணாகிய வேங்கிடக்குளத்தைச் சேர்ந்தவருமான அருள்பணி. சு. மு. சாமி தஞ்சை மறைமாவட்டத்தின் சார்பில் வாழ்த்துரை வழங்கினார். பேராசிரியர் கஸ்பார் வேதியர்கள் சார்பில் விழா நாயகர் கடந்து வந்த பாதையை சிற்றேடாகக் கொடுத்து வாழ்த்தினார். அதன்பின் தன் சார்பாக வாழ்த்துரை வழங்கினார். பின்னர், பேராயர் மேமிகு பிரான்சிஸ் கலிஸ்ட் தமது ஆசியுரையைச் சிறப்பாக வழங்கினார். விழா நாயகர் தமது ஏற்புரையை நன்றியுரையாக ஆற்றினார். பாப்பிறைப் பண்ணுடன் விழா இனிதே 1:15 மணியளவில் நிறைவுற்றது.

இவ்விழாவில் அருள் சகோதரிகள் 17 போர், விழா நாயகரின் குடும்பத்தார், வேதியர்கள், நடுநிலையத்தோடு தொடர்புடைய விருந்தினர்கள், நடுநிலையப் பணியாளர்கள் மேற்பட்டோர் பங்கேற்றனர். உடனே பகல் உணவு விருந்தளிக்கப்பட்டது. விழா நாயகரின் சார்பில், விழாவிற்கு வருகைத் தந்திருந்தோருக்கு நன்றிப் பரிசுகள் வழங்கப்பட்டன.

**செய்தி: அருட்சகோதரி. சாகாயம் FSAG, முப்பணி மையம்**



# தூரத்து அழகு

அருட்பணி. ஜெயசீலன் சவேரியார் பிச்சை ச.ச.

இயற்கை அழகு கொட்டிக்கிடக்கும் கிராமம் அது. காணும் இடம் எல்லாம் பச்சை நிறம், நீர் நிலைகளெல்லாம் நிறைந்த ஓட்டம், சுத்தமான காற்று, சுகாதாரமான சுற்றம், கலப்படமில்லாத உணவு, கள்ளம் கபடமற்ற உறவுகள் என்று இயற்கையோடு ஒன்றித்து, இறைவனோடு சங்கமித்த வாழ்க்கையை, தினம் தினம் அறுவடை செய்த இளையவன் ஒருவனுக்கு, திடீரென்று வெளிநாட்டு ஆசை. நண்பன் ஒருவன் வெளிநாட்டிற்குச் சென்று செல்வச் சிறப்போடு இருப்பதால், அவனுக்கும் அதே ஆசை. பல முயற்சிகளின் இறுதியில், பல்லாயிரம் எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில், வெளிநாடு செல்கிறான். மிகுந்த ஆர்வத்தோடு தரை இறங்கியவனுக்கு மாபெரும் ஏமாற்றம். அங்கே, பச்சை நிறம். பகல் கனவு, தினசரி வாழ்க்கை, வாடகைக் காற்று, துரித உணவு, உறவுகள் இல்லா தனிமை என்று அனைத்தும் அவன் ஆசையை நாசம் செய்தன. ஒரு சிறிய அறையிலே பத்துப் பேர் தங்கினார்கள். சூடு ஒரு புறம் தாக்க, நெரிசலின் வாசம் அவனைச் சம்பவம் செய்தது. தனது ஊரில் இருந்தபோது அழகாய் தோன்றிய வெளிநாடு, அருகில் இருக்கும்போது அருவருப்பாய் தோன்றியது. தூரத்து அழகு, கிட்டத்தில் அழுக்கு.

மலையைத் தூரத்திலிருந்து பார்க்கும்போது அதன் படர்ந்த பச்சை நிறம் பேரழகு. அருகில் செல்லச் செல்ல உருக்குலைந்த தோற்றங்கள், அதன் அழகை மெல்ல மெல்ல குறைக்கிறது. தூரத்தில் இருக்கும் உறவுகள், உறவுகளுக்காக ஏங்கும், தினம்தினம் அலைபேசியில் உருகும், அருகில் இருத்தலுக்கு விரும்பும். விடுமுறைக்காக அருகில் வரும்போது சிறு சிறு பிரச்சனைகளால் வார்த்தைகள் வலுக்க, வாதங்கள் பெருக்க, மீண்டும் தூரத்தை விரும்பும் மனது. காதலன் தன் காதலியைப் பார்க்க வேண்டும், பேச வேண்டும், தன் காதலைச் சொல்ல வேண்டும் என்று நினைத்து பரவசப்படுவதும், இரண்டு பேருக்கும் இருக்கும் குடும்ப மற்றும் சமூக இடைவெளிகளால் விலகி இருப்பதும், வரும் இனம் புரியா உணர்வுகளும், ஒருவகையான அழகு–தான். அதன் பிறகு இருவரும் சந்தித்து, பேசிப் பழகி, இறுதியில் திருமணம் செய்த பிறகு, சில வேளைகளில் புரிந்துணர்வு இல்லாமல், பேசாமல் இருப்பதும், பேசுவதே பிரச்சனையாக மாறுவதும் வாழ்க்கையின் வருத்தம். ஆக, தூரத்தில் இருக்கும்போது இருந்த ஆனந்தம், சில வேளைகளில் அருகில் இருக்கும் போது இல்லாமல் போவதே இன்றைய எதார்த்த உண்மை. ஆனால், ஆராய்ந்து பார்த்தோமே யென்றால், தூரத்தில் இருந்தபோது உள்ள அழகில், பக்கத்து நிதர்சனங்கள் உள்பொதிந்து இருப்பதைக் கண்கூடாகப் பார்க்க முடிகிறது. தூரத்திலிருந்து பார்த்த மலையின் அழகிற்கு, உருக்குலைந்த தோற்றத்தின் பங்கும் உண்டு.

குறையும், நிறையும் சேர்ந்ததே அந்த அழகின் இரகசியம். தூரத்திலிருக்கும் உறவுகளின் ஏக்கத்தில், அருகிலிருக்கும் போது எழும் பிரச்சனைகளும் உள்ளடக்கம். ஏக்கங்களும், பிரச்சனைகளும் இணைந்ததே வாழ்க்கையின் சுவாரசியம். காதலின் தொடக்கத்திலிருக்கும் பரவசத்தில், திருமணத்திற்குப் பின்பு எழும் அதிருப்திகளும் அடங்கும். பரவசமும், பாரா நிலையும் காதல் வாழ்வின் இரு கண்கள். ஏன், வெளிநாட்டு வாழ்க்கையை விரும்புகிறவன், அதில் இருக்கும் பிரச்சனைகளையும் புரிந்துகொள்ள வேண்டும். சொகுசும், சோகமும் நிறைந்ததுதான் வெளியுலக நடப்பு. நிறை குறைகளைத் தெரிந்து, இரண்டையும் எதிர்கொள்ளத் தயார் நிலையில் செல்பவனின் வாழ்க்கை அழகு. ஆக, நன்மை, தீமை உண்மை, பொய்மை மகிழ்ச்சி, இகழ்ச்சி இன்பம், துன்பம் செழுமை, வறுமை என்று வாழ்க்கைப் புத்தகத்தின் இரு பக்கங்களையும் எதிர்கொள்ள தன்னைச் செதுக்கினால், தூரத்து அழகு, அருகிலும் நம் வசம். ஆனால் கவலை என்ன வென்றால், இன்றைய தலைமுறையானது, சொகுசு வாழ்வில் தன்னை முழுமையாகப் பறிகொடுத்து, துன்பம் வரும்போது அதை எதிர்கொள்ளத் துணிச்சல் இல்லாமல் தடுக்கி விழுந்து, தன் அழகை தொலைத்து, வாடிக்கை மனிதர்களாக மாறி நிற்பது வருத்தம். இரண்டும் இணைந்த போராட்ட வாழ்க்கைதான் பேரழகு என்பதை மறந்துவிட்ட நிலை இன்னும் பெரும் வருத்தம்.

ஆனால் தூரத்திலிருந்து பார்த்த அதே அழகை, பக்கத்திலிருந்தும் ரசிக்க முடியும் என்றால் நீ பேரழகன்தான், பேரழகிதான். வாழ்க்கையின் எதார்த்தங்களோடு, எதிர்நீச்சல் அடிக்கக் கற்றுக் கொண்டவன், எத்தனை எதிர்வினைகள் வந்தாலும், தான் ரசித்த அழகை, இறுதிவரை ரசித்துக்கொண்டுதான் இருப்பான். மேடு, பள்ளம் உயர்வு, தாழ்வு பசுமை, வறட்சி விழுவது, எழுவது என்று எது வந்தாலும், தன் வாழ்வின் அழகை மறுப்பதில்லை. ஏனென்றால் இரண்டும் இணைந்ததுதான் வாழ்க்கை. ஒற்றை நேர்க்கோட்டில் நேராகச் செல்லுவது அல்ல, மாறாக அந்தக் கோட்டில் மேலும் கீழுமாக, முன்னும் பின்னுமாக, மாறி மாறிச் செல்வதுதான் வாழ்க்கையின் அழகு. இதை உணந்தவன், தூரத்திலிருந்து ரசித்த அழகை, அருகிலிருந்தும் கண்டு கொள்வான். தூரத்து அழகு, நம்மைத் தூரத்தும் பேரழகு.

## படித்ததில் பிடித்தது

தினமும் ஒரு இளைஞன் அதிகாலை வேளையில் தினசரி பேப்பர் போடும் போது ஒரு வீட்டில் அதற்காக ஒரு அஞ்சல் பெட்டி போல ஒரு பெட்டி முன் வாசலில் இருக்கும். பேப்பர் போடும் பையனும் தினமும் அதிலேயே பேப்பர் போட்டு வந்தான். திடீரென ஒரு நாள் அந்த பெட்டியைக் காணவில்லை. அழைப்பு மணியை அழுத்தி பார்த்த போது 80 வயதளவு மதிக்கத்தக்க ஒரு பெரியவர் மெதுவாக வந்து கதவைத் திறந்தார். இளைஞனும் அவரிடம் ' வாசலில் இருந்த பெட்டி எங்கே ஐயா?' என்று கேட்டான். பெரியவரோ ' தம்பி நான் தான் அந்த பெட்டியை நேற்று எடுத்து விட்டேன். நீ தினமும் என்னை அழைத்து பேப்பரை என் கையில் கொடுத்துவிடு' என்றார். இளைஞனோ ' ஐயா அது உங்களுக்கும் நேரம் எடுத்துக்கொள்ளும், எனக்கும் நேரம் அதிகம் செலவாகும், காலையிலே பல இடங்களுக்கு பேப்பர் போடுவதால் எனக்கு நேரம் கூடுதலாக செலவாகும். ஆகவே நீங்கள் மறுபடியும் அந்த பெட்டியை இருந்த இடத்திலேயே வைத்தால் நன்றாக இருக்கும்' என்றான். பெரியவரோ ' தம்பி, பரவாயில்லை. நீ என்னை அழைத்து கையில் பேப்பர் கொடுத்துவிட்டு போ. வேண்டுமென்றால் நான் கூடுதலாக 500 ரூபாய் ஒவ்வொரு மாதமும் தருகின்றேன்' என்றார். இளைஞனுக்கு ஒன்றும் புரியவில்லை. அவரிடமே காரணத்தைக் கேட்டான். அதற்கு பெரியவர்,

தம்பி சமீபத்தில் என்னுடைய மனைவி காலமாகி விட்டாள். நான் தனியாகவே இருக்கின்றேன். எனது பிள்ளைகளெல்லாம் வெளிநாட்டில் இருக்கின்றார்கள். என் மனைவி நெடு நாட்களாக மரணப்படுக்கையில் நோயாளியாகவே இருந்து இறந்து விட்டாள். நான் பெற்று வளர்த்த பிள்ளைகளெல்லாம் அவள் நோயாக இருந்தபோதே கொஞ்சம் கொஞ்சமாக போனில் கதைப்பதை நிறுத்தி விட்டார்கள். என் மனைவியின் மரணத்திற்கு கூட யாரும் வரவில்லை. நான் கஸ்ரப்பட்டு வளர்த்த பிள்ளைகளுக்கும் நான் பாரமாகிவிட்டேன். நீயாவது தினமும் வந்து என்னை அழைத்து பேப்பர் தந்தால், நான் இன்னமும் உயிரோடுதான் இருக்கின்றேன் என்று அக்கம் பக்கம் உள்ளவர்களுக்கும் புரியும். யாரெல்லாம் எனது நெருங்கிய சொந்த உறவுகள் என நினைத்தேனோ, அவர்கள் எலலோருமே துக்கம் விசாரித்ததோடு கடமைக்கு என வந்து போனார்கள். ஆனால் யாரெல்லாம் வரவே கூடாது என நினைத்தேனோ, அந்த அக்கம் பக்கத்தினர்தான் என் மனைவியில் இறுதிச் சடங்கில் இறுதி அடக்கம் வரையில் எந்த பலனும் எதிர்பார்க்காமல் இருந்து உதவினர். இப்போது நானும் வயோதிபன் என்பதால் பக்கத்து வீட்டில் உள்ளவர்கள் கூட என்னோடு பாசத்தோடு ஸ்நேகம் வைத்து கொள்வதில்லை. காரணம் பணம், அந்தஸ்து. உயர்ந்து நிலையில் நான் இருந்தபோது வந்து கொண்டாடிய அந்த நல்ல உள்ளங்களை மதிக்கத் தெரியாமல் தடுத்த என்னால் எந்த விதமான நன்மையும் வராது என்று தான் அவர்களும் என்னை தொடர்பு கொள்வதில்லை. ஒரு வேளை நீ பேப்பர் போட தினமும் என்னை அழைக்கும் போது, நான் வரவில்லை என்றால் நான் அன்று இறந்து விட்டேன் என தீர்மானித்து விடு. உடனே அக்கம் பக்கம் பொலிஸை அழைத்து சொல்லி விடு. அப்புறம் தம்பி என்னுடைய பிள்ளைகளின் வாட்சப் நம்பரும் தருகின்றேன். ஒரு வேளை இறக்கும் போது தயவ செய்து என் பிள்ளைகளுக்கு வாய்ஸ் றெக்கோட் ஊடாக என் மரணச் செய்தியை சொல்லி விடு – என்றார்.

இதையெல்லாம் கேட்ட அந்த இளைஞனுக்கு கண்களிலிருந்து தாரை தாரையாக கண்ணீர் வந்தது. சொல்லிக் கொண்டிருந்த பெரியவருக்கும் குரல் தழுதழுத்தது. இன்றைய நவீன உலகில் தனித்த தீவாக உள்ள வீடுகளிலும் ஒவ்வொரு அப்பாட்மெண்டிலும் இந்த மாதிரி முதியோர்கள் இருக்கத்தான் செய்கின்றார்கள். சில முதியோர்கள் வாட்சப்பில் தினமும் குட்மோர்ணிங் என்றும் வணக்கம் என்றும் அனுப்பும் போதெல்லாம், இந்த பெரிசுக்கு வேற வேலையில்லை. இது ஒரு தொல்லை தான் என்று நினைத்து பலரை நானே பிளக் (Block) செய்துள்ளேன். பச்சை இலைகள் ஒன்றை மறந்து விட வேண்டாம், நாமும் பழுத்த இலைகள் ஆகி மரத்திலிருந்து ஒரு நாள் உதிர்ந்து விடுவோம் என்று.....!!!

## அன்னை மரியா




புனித அல்போன்ஸ் மரிய லிகோரி அன்னை மரியாவின் கரங்கள் வழியல்லாமல் நாம் ஒன்றையும் பெற முடியாது என்பதை உணர்ந்தார். தனது வாழ்வில் ஒவ்வொரு நிமிடமும் அன்னையின் வழியாக இறையருளை பெற்றார். எல்லா சனிக்கிழமைகளிலும் அன்னை மரியாவை நினைவு கூரவும், தினமும் செபமாலை செய்ய குருக்களுக்கும், இறைமக்களுக்கும் அழைப்பு விடுத்தார். “ நமது வாழ்வில் துன்பங்கள், சோதனைகள், வருத்தங்கள், ஏமாற்றங்கள், கவலைகள் பெருகும் போது அன்னை மரியாவின் உதவியை நாடவேண்டும். அன்னையின் நாமம் நமது உதடுகளை விட்டு நீங்காதிருக்கட்டும். அன்னை மரியாவை பின்பற்றினால் மீட்பின் பாதையில் எளிதாக நடக்க இயலும். நம்பிக்கை இழக்கமாட்டோம் சோர்வடைய மாட்டோம் தீமைக்குப் பயப்பட வேண்டாம் விண்ணக வாழ்வை பெற்றுக் கொள்வோம்” என்றார். **“ செபமாலை சொல்லும் ஒரு படையை எனக்கு கொடுங்கள். நான் இவ்வுலகையே வென்றுக் காட்டுகிறேன்”** என்பதற்கேற்ப செபமாலையை கரங்களில் ஏந்தி தினமும் செபம் செய்தார். செபமாலையின் சக்தியால் தப்பறைகளை தோற்கடித்தார்.

**நீதியின் பொருட்டுத் துன்புறுத்தப்படுவோர் பேறுபெற்றோர். ஏனெனில் விண்ணரசு அவர்களுக்குரியது.**

## திரு அவைச் செய்திகள்

- **நட்பு மற்றும் அமைதியைத் தாங்குபவர்களாக இருங்கள் – திருத்தந்தை**

மரியாவின் பணியாளர்கள் சபையினருடைய பாரம்பரியத்தின் மூன்று தூண்களாக விளங்கும், உடன்பிறந்த உறவு, சேவை மற்றும் மரியன்னை ஆன்மிகம் குறித்த சிந்தனைகளை அவர்களுடன் பகிர்ந்துகொண்டார் திருத்தந்தை.

- **அமைதி மற்றும் ஒன்றிப்புக்கான திருத்தந்தையின் திருத்தூதுப் பயணம்!**

திருத்தந்தை அவர்களின் இந்தத் திருத்தூதுப் பயணம், துருக்கி மற்றும் லெபனோன் உள்ளிட்ட இரு நாடுகளிலும் உள்ள கிறிஸ்தவச் சமூகங்களை ஆதரிப்பதோடு, அமைதி மற்றும் ஒன்றிப்புக்கான அவரது உறுதிப்பாட்டை எடுத்துக்காட்டுகின்றது : திருப்பீடச் செய்தித் தொடர்பகம் நவம்பர் 27 முதல் டிசம்பர் 2, வரை திருத்தந்தை பதினான்காம் லியோ அவர்கள் மேற்கொண்ட துருக்கி மற்றும் லெபனோன் திருத்தூதுப் பயணம், கிறிஸ்தவ உரையாடல், மதங்களுக்கு இடையேயான உறவுகள் மற்றும் தலத்திரு அவை சமூகங்களுக்கான ஆதரவை மையமாகக் கொண்டுள்ளது என்று திருப்பீடச் செய்தித் தொடர்பகம் தெரிவித்துள்ளது.

- **ஒவ்வொரு நபரும் மரியாதைக்கு உரியவர்! : திருத்தந்தை**

"பல மோதல்கள் அடிப்படை அநீதிகளிலிருந்து உருவாகின்றன என்பதால், அமைதிக்கு நீதி அவசியத் தேவையாக அமைகிறது" – திருத்தந்தை பதினான்காம் லியோ "ஒவ்வொரு நபரும் மரியாதைக்கு உரியவர், ஒவ்வொரு மனிதருக்கும் மாண்பு உண்டு" என்றும், "நாம் அனைவ ருக்கும் நன்மையையும் அமைதியையும் விரும்பும் மக்களாக இருக்க வேண்டும்" என்றும் கூறினார் திருத்தந்தை பதினான்காம் லியோ.

- **மோதல் பகுதிகளில் வாழும் கிறிஸ்தவர்களுக்காக செபிப்போம்!**

போரினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கிறிஸ்தவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சனைகளை ஒப்புக்கொண்டுள்ள திருத்தந்தை வன்முறையின் மத்தியிலும், அவர்கள் கடவுளின் ஆறுதலான இருப்பையும் சக விசுவாசிகளின் ஆதரவையும் உணர வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

போர் அல்லது மோதல்கள் நிறைந்த பகுதிகளில், குறிப்பாக மத்திய கிழக்கில் வாழும் கிறிஸ்தவர்கள், அமைதி, நல்லிணக்கம் மற்றும் நம்பிக்கையின் விதைகளாக இருக்க வேண்டும் என இறைவேண்டல் செய்வோம் என்று கூறியுள்ளார் திருத்தந்தை பதினான்காம் லியோ.




மீரிகம, கீனதெனிய பகுதியில் புனரமைக்கப்பட்டுள்ள புனித ஸ்டீபன் தேவாலயத்தை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு பொருத்தமற்ற பாலியல் கல்வியை பாடசாலை பாடத்திட்டத்தில் உள்ளடக்குவதன் மூலம் சிறுவர்களைத் தவறான வழியில் திசைதிருப்பும் திட்டம் இலங்கையில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதாக பேராயர் மெல்கம் கர்தினால் ரஞ்சித் தெரிவித்துள்ளார்.1

"இப்போது சிறுவர்களுக்கு ஆறாம் தரம் முதல் பாலியல் கல்வி வழங்க ஒரு புதிய பாடத்திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறதாம். இந்த விடயங்கள் குறித்து ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்க செயலமர்வுகள் நடத்தப்படுகின்றன. இந்தக் கல்வித்திட்டத்தில் குறிப்பாக, தன்பால் உறவுகளை ஏற்படுத்திக் கொள்வது பற்றியும், பிறப்புக் கட்டுப்பாடு பற்றியும் மாணவர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட உள்ளதாம்.

இத்தகைய அனைத்து விடயங்களுக்குப் பின்னாலும் இருப்பது, நம் நாட்டைக் கெடுக்கத் துடிக்கும் சர்வதேச அமைப்புகளே, குறிப்பாக ஐக்கிய நாடுகள் குடும்பக் கட்டுப்பாட்டு சங்கம் இந்தக் கல்வி அமைச்சுக்கு பணம் கொடுத்து, அதற்கான புத்தகங்களை அச்சிட்டு, இன்று இலங்கையில் இந்தப் பிள்ளைகளைத் தவறான வழியில் கொண்டு செல்லும் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருவதாகவும் அவர் குற்றஞ்சாட்டினார். இந்த நாகரிகமற்ற விடயங்களை நம் பிள்ளைகளுக்குக் கற்பிக்கச் செல்ல வேண்டாம். நல்லது கெட்டது தெரியாத இந்தப் பிஞ்சுகளைத் தவறான வழியில் கொண்டு செல்ல கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்தால், நாம் அதை முழுமையாகக் கண்டிக்க வேண்டும். இத்தகைய விடயங்களை தேவைப்படும்போது எடுத்துரைக்கும் பொறுப்பு பெற்றோர்களுக்கே உரியது, இது கல்வி அல்ல, இது திசைதிருப்பும் செயலாகும்.

அடுத்த வருடம் ஜனவரி மாதம் 27ஆம் திகதி முதல் இந்தப் பாடங்கள் பாடசாலைகளில் கற்பிக்கப்பட உள்ளனவாம். "நாகரிகமான ஒரு அரசாங்கம் இவ்வாறான விடயங்களுக்கு எப்படி இடமளிக்கிறது? நம் கலாசாரத்தையும் நாகரிகத்தையும் அழிக்க அனுமதிக்க முடியாது. நம் நாட்டை ஆளும் தலைவர்கள், "நம் நாட்டின் கலாசாரம், நாகரிகம், மதம் ஆகியவற்றை பாதுகாக்க தைரியமாக முன்நிற்க வேண்டும். இந்த விடயங்களை அமைச்சு அதிகாரிகளின், சில மருத்துவ சங்கங்களின், சில சட்டத்தரணி சங்கங்களின் விருப்பப்படி திசை திருப்ப இடமளிக்க வேண்டாம்" என்று ஜனாதிபதியிடமும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

## தலைமன்னார் பங்கில் தேவ அழைத்தல் பெற்று இறைபதம் அடைந்த ஆன்மாக்களுக்கு நினைவேந்தல்.



உலகம் பூராவும் கத்தோலிக்க திருச்சபையானது விஷேடமாக நவம்பர் மாதம் முழுதும் திருச்சபையிலிருந்து மரணித்த ஆன்மாக்களுக்காக திருப்பலிகள் ஒப்புக்கொடுத்து ஆன்மா ஈடேற்றத்துக்காக செபிப்பது போல, தலைமன்னார் பங்கிலிருந்து தேவ அழைத்தல் பெற்று திருஅவையில் ஆன்மீக வளர்ச்சிக்காகவும், சமூக வளர்ச்சிக்காகவும் தங்களை அர்ப்பணித்து உழைத்து விண்ணகம் சென்றுள்ள ஆன்மாக்களுக்கான விஷேட வழிபாடு தலைமன்னார் புனித லோறன்சியார் ஆலயத்தில் இடம்பெற்றது.

இந்த வகையில் தலைமன்னார் புனித லோறன்சியார் ஆலய பங்கை சேர்ந்த மக்கள் இவ் ஆலயத்தில் ஒன்றுகூடி இப் பங்கிலிருந்து மரணித்த அருட்பணியாளர் மற்றும் அருட்சகோதரிகளின் ஆன்ம ஈடேற்றத்திற்காக சிறப்பு வழி–பாடுகளை நடாத்தினர்.

பங்குத்தந்தை அருட்பணி டெனி கலிஸ்ரஸ் அடிகளாரின் தலைமையில் தலைமன்னாரை பிறப்பிடமாகக் கொண்டு மரணித்துள்ள திருக்குடும்ப கன்னியர் சபையைச் சார்ந்த அருட்சகோதரிகள் ஜேட்றூட் பெனாண்டோ (கேட்டி)– றெஜினா கூஞ்ஞ– டெனிஸ் கூஞ்ஞ– கத்தரீன் கூஞ்ஞ– ஜேம்ஸ் கூஞ்ஞ மற்றும் அருட்பணி ஜொனார்த்தன் கூஞ்ஞ அடிகளார் ஆகியோ ரின் ஆன்மா இளைப்பாற்றிக்காக விஷேட வழிபாடுகள் நடைபெற்றது.

இவர்களின் உருவப்படங்களை ஆலயத்துக்குள் வைக்கப்பட்டு உறவினர்களாலும் பொதுமக்களாலும் மலர்மாலைகள் சூட்டியும் மலர்கள் வைத்தும் விளக்குகள் ஏற்றியும் இறை வணக்கத்துடன் மரியாதையும் செலுத்தப்பட்டு இறைமக்களின் பங்களிப்புடன் பங்குத் தந்தையால் இவர்களின் ஆன்ம ஈடேற்றுக்கான விஷேட திருப்பலியும் ஒப்புக்கொடுக்கப்பட்டது.

இந்த வழிபாட்டின்போது பங்குத் தந்தை அருட்பணி டெனி கலிஸ்ரஸ் அடிகளார் தெரிவிக்கையில் மன்னார் மறை மாவட்டத்திலே திருக்குடும்ப கன்னியர் சபையில் முதல் கன்னியாஸ்திரியாக தன்னை அர்ப்பணித்தவர் இந்த பங்கைச் சேர்ந்த அமரர் அருட்சகோதரி றெஜினா கூஞ்ஞ என்பவர்தான்.

ஆகவே அவர் முதன்முதலாக திருக்குடும்ப சபையில் கன்னியாஸ்திரியாக முன்னெடுத்துச் சென்ற இந்த அர்ப்பணிப்பைத் தொடர்ந்து அவரின் அடிச்சுவட்டில் சென்று தங்களை அர்ப்பணித்து விண்ணுலகம் சென்றுள்ள இங்கு நினைவு கூறும் ஆன்மாக்களை நினைவு கூறும்போது இவர்கள் எமக்கு விட்டுச் சென்றுள்ள தேவ அழைத்தல் இப்பங்கில் பெருக வேண்டும் எனவும் நாம் இறைவனிடம் வேண்டிக் கொள்வோம் என்றார்.

## இறையடியார் அ. தோமஸ் அடிகளாரின் 'மறை மாவட்ட நினைவு நாள்

யாழ்ப்பாணம்)

மறைந்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கடந்த வருடம் (2024 ஆம் ஆண்டு) வெளியிட்ட அம்போஸ்தலிக்க திரு மடலில் ஜூபிலி ஆண்டிலிருந்து ஒவ்வொரு வருடமும் நவம்பர் மாதம் 9 ஆம் திகதி தங்கள் நாடுகளிலுள்ள இறையடியார்களை நினைவு கூரும் திரு–வழிபாட்டினை நடத்துமாறு அழைப்பு விடுத்திருந்தார்.

இதற்கமைய நாளை 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ் மறை மாவட்டத்தின் எல்லா கத்தோலிக்க தேவாலயங்களிலும் செபமாலை தாசர் துறவு சபையின் நிறுவுனர் இறையடியார் வ. அ. தோமஸ் அடிகளாரை நினைவு கூரும் திருவழிபாட்டு திருப்பலி சிறப்பாக நடைபெறவுள்ளது. யாழ். புனித மரியன்னை பேராலயத்தில் இறையடியார் வ.அ. தோமஸ், அமதி அடிகளாரின் நினைவுக் கொண்டாட்ட திருப்பலி. யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் அருட் பணி ஜெபரெட்ணம் அடிகளாரின் தலைமையில் 09 – 11 – 2025,ல் நடை பெற்றது. அருட்தந்தை அ.ம. ஸ்டீபன், செ,தா. அருட்பணி ம.யோண்பொஸ்கோ, செ.தா. மற்றும் 3 இந்தியக் குருக்களும் கூட உள்ளனர்.

நாளை மறுதினம் திங்கட்கிழமை யாழ்ப்பாணம் கோவில் வீதியில் அமைந்துள்ள செபமாலை தாசர் துறவு சபையின் அருள் ஆச்சிரமத்தில் காலை 6 மணிக்கு இறையடியார் வ. அ. தோமஸ் அடிகளாரின் கல்லறை மண்டபத்தில் சிறப்புத் திருப்பலி இடம்பெறவுள்ளது.





கடவுளே! எம்மீது இரங்கி, எமக்கு ஆசி வழங்குவீராக! உம் திருமுக ஒளியை எம்மீது வீசுவீராக! (திபா67:1-2)

## திரு விவிலியத்திலிருந்து எடுத்தாளப்பட்ட தித்திக்கும் திருக்குறள் குறள் 786

### சிறந்த நண்பர்கள்

சிறந்த நண்பர்கள் என்ற தலைப்பில் நாம் சிந்திக்கும்போது நம் மனக்கண்களுக்குள் நினைவில் வருபவர்கள் அரசர் தாவீதும் சவுலின் மகனாகிய யோனத்தானும் ஆவார்கள்.



இவர்கள் இருவரும் இன்றைய கால நண்பர்களுக்கு ஒரு முன்னுதாரணம். எவ்வாறெனில் தாவீதின் மீது சவுல் பொறாமை கொண்டபோது தன்னுடைய தந்தை என்று பாராமல் வாக்குவாதத்தில் ஈடுபட்டார் யோனத்தான். இத்தகு நட்பை இக்கால கட்டத்தில் காண்பது அரிது. யோனத்தான் அரசனின் மகன், தாவீது போர் வீரன். இருவருக்கும் வேறுபாடு உண்டு. தவறு செய்பவர் தம் தந்தை என்பதை உணர்ந்து அவரைத் திருத்த முடியவில்லை. தந்தையின் வஞ்சகத் திட்டத்தைத் தாவீதிடம் கூறி அவனை எச்சரிக்கையுடன் இருக்க அவரை வற்புறுத்துகிறார். இது ஒருவேளை அரசர் சவுலுக்குத் தெரிந்தால் தனக்கு கொலைத்தண்டனை கிடைக்கும் என்பதை உணர்ந்தும் யோனத்தான் நண்பனுக்காக எதையும் ஏற்கத் தயார் என்பது போல நட்புக்கு முதலிடம் கொடுக்கிறார். இதுதான் நட்பின் இலக்கணம்.

ஆதலால்தான் வான்புகழ் வள்ளுவர் நட்பு ஆராய்தல் அதிகாரத்தில் இவ்வாறு கூறுகிறார்.

**முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து அகநக நட்பது நட்பு**

**பொருள்:** ஒருவருடன் முகம் மட்டும் மலரும்படியாக நட்பு கொள்வது நட்பு அன்று நெஞ்சமும் மலர உள்ளன்பு கொண்டு நடப்பதே நட்பாகும்.

இந்த குறட்பாவிற்கும் இலக்கணமாய் வாழ்ந்தவர்கள்தான் தாவீதும் யோனத்தானும். இவர்கள் நெஞ்சம் மலரும் படியாக நட்பு கொண்டமையால் இவர்களது நட்பு இன்றளவும் பேசப்படுகிறது.

**இன்றைய நட்பு :** இன்றைய காலகட்டத்தில் நல்ல நண்பர்கள் இருக்கிறார்கள். ஆனால் அவர்களைவிட பணத்திற்காகவும் ஆடம்பரத்திற்காகவும் தன் நலனுக்காகவும் நட்பு கொள்பவர்கள் பலர். சமூகத்தில் இவ்வாறு நடப்பது உண்மையே!

கடைசியாக நாம் நட்பு கொள்ளும்போது பணத்தைப் பாராமல் அவர்களது மனதைப் பார்ப்போம். சுயநலன் காணாமல் பிறர்நலன் பேணுவோம். நம் நட்பும் வரலாற்றில் பொறிக்கப்படும்.

**சகோதரர். அருள்தாஸ்**

## கடவுள் மனசு



குறையுள்ள குழந்தையைப் பெற்றெடுத்த அந்த நொடியில் கடவுளே கதிகலங்கிப் போகிறார்: எப்படி. இக்குறையைக் கரையேற்றப் போகிறேன்? அக்கறை கொண்டோரிடம் எப்படி எடுத்துச் செல்கிறார்? அதை வளர்த்தெடுக்க அதிமிகப் பொறுப்பான பெற்றோரைத் தேடுகிறார்; கண்டடைகிறார்; கொடுக்கிறார். குழந்தையை வளர்த்தெடுக்க மனசு வேண்டும். குறையுள்ள குழந்தையை வளர்த்தெடுக்க பெரிய மனசு வேண்டும். அத்தகைய மனசுக்காரர்கள் சாமானிய மக்கள் அல்ல; பூமியின் சாமிகள்! தியாகத்தின் திரு உருவங்கள்! கடவுளின் கால் தடங்கள்!

புனித அன்னாள் மனநலம் குன்றியோர் பள்ளி ஆண்டு விழா நேரம் அது. குறையான குழந்தைகளின் நிறைவான கலை நிகழ்ச்சிகள் அன்று நடந்து கொண்டிருந்தது. அதில் பேசினார் மறைமாவட்ட ஆயர் அவர்கள். அப்போது அவர் சொன்ன நிகழ்வு இது;

வெகு சமீபத்தில் ஒரு குடும்பத்தைச் சந்தித்தேன். இருவரும் அரசுப் பணியாளர்கள்; நல்ல சம்பளமும் கூட. ஆனால் அவர்களது ஆசை மகளோ.... டவுன் சின்ட்ரம் பேபி. "கடவுள் கொடுத்த கொடை அது என்று எண்ணி பொறுப்போடு வளர்த்தார்கள். அந்த ஜோசப் குடும்பத்தார். இப்போது அது பதினைந்து வயதுக் குழந்தை. அந்தக் குழந்தைக்கு வீடுதான் உலகம்! உலகம் தான் வீடு!"

அவர்களது மனநிலையைக் கண்டறிய கேள்வி ஒன்றைக் கேட்டேன்; "இந்தக் குழந்தை உங்களுக்கு சுமையாக இல்லையா? இந்த மகளால் என்ன பயன்?" கண்ணீர் கனிவோடு அவர்கள் சொன்னார்கள்: **"ஆயர் அவர்களே! கடவுள் எங்களுக்குத் தந்துள்ள சிறப்பான குழந்தை இது! இக்குழந்தை எங்களுக்குச் சுமையல்ல; சுகம்!"** தொடர்ந்தார்கள்; **"நாங்கள் ஒவ்வொரு நாளும் வேலைக்குக் கிளம்பும் முன்பாக இவளிடம் தான் ஆசீர் வாங்கிச் செல்கிறோம். அவளும் எங்களை நன்றாக ஆசீர்வதித்து அனுப்பி வைக்கிறாள். எங்களது அன்றாட உணவோடு அனுதின ஆசீரையும் தருவது இந்தக் குழந்தைதான்!"** நிகழ்ச்சியை விளக்கிவிட்டு ஆயர் சொன்னார்கள்: "கடவுள் பல சமயங்களில் ஆசீரையும் அருளையும் நேரடியாகத் தருவதில்லை; இக்குழந்தைகள் வழியாகத்தான் கொடுக்கிறார். இந்த வளாகத்திலே குறையுள்ள குழந்தைகள் நிறைய இருக்கிறார்கள். அவர்கள் ஒவ்வொருவரிடமும் சென்று மறக்காமல் ஆசீர்பெற்றுச் செல்லுங்கள்!"

# என் காலடிக்கு உம் வாக்கு விளக்கு என் பாதைக்கு ஒளியும் அதுவே!

## இளையோரே விழித்திரு!

நாம் ஒவ்வொருவரும் ஒரு புதிய யுகத்துக்குள் இருக்கிறோம்.

அதுதான் சாதகமும் பாதகமும் நிறைந்த நவீன தொழில் நுட்பம். நிச்சயமானவற்றை தவிர்த்து, நிச்சயமற்றவற்றுடன் காலத்தை நகர்த்தி கொண்டிருக்கிறோம். இவ்வேளையிலே தான் இளைஞர்கள் மற்றும் யுவதிகளின் ஆன்மீக மேம்பாட்டின் முக்கியத்துவத்தை உணர கடமைப்பட்டுள்ளோம்.

திறமைகளின் ஊற்றே இளையோர். இன்று எம்மில் எத்தனைபேர் திறமைகளை சரியான வழியில் எத்தனை பேர் பயன்படுத்துகின்றோம்,? ஆண்டவருக்காய் எம்மை அர்ப்பணிக்கின்றோம்? அவ்வாறு அளவுக்கு அதிகமாக ஆண்டவரை நேசிக்கும் ஆராதிக்கும் இளையோர் இன்று மிகவும் அரிதிலும் அரிது என்றே கூறலாம். No one is bussy here priority is everything என்று ஒரு ஆங்கில முதுமொழி உண்டு. வேலைப்பழு



அதிகமானோர் என்று இங்கு யாருமில்லை, முனனுரிமை தான் அதிகம் என்பது பொருள். வேலைப்பழு என்னும் சாக்கு போக்குகளுக்குள் ஒளிந்து கொண்டு இன்று பெற்றோர் பெரியோரின் ஆலோசனைகளை அவமதித்து கையடக்க தொலைபேசி என்னும் சங்கிலியால் கட்டப்பட்ட அப்பாவிப் பிராணிகளைப் போல்



அலைமோதுகின்றோம். நீதி மொழியாகமத்தில் இவ்வாறு கூறப்படுகிறது.

நீதிமொழி 1:8–9 **பிள்ளாய், உன் தந்தை தந்த நற்பயிற்சியை கடைப்பிடி. உன்தாய் கற்பிப்பதை தள்ளிவிடாதே. அவை உன் தலைக்கு மணிமுடி. உன் கழுத்துக்கு மணிமாலை.**

நாம் இன்றைய சமுதாயத்தில் பல்வகையான சவால்கள் மத்தியில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இச்சவால்களை தாண்டி முன்னோக்கி நகர்வதற்கு நாம் ஒவ்வொருவரும் எம் பெற்றோரின் அறிவுரைக்கு செவி மடுப்போம். இறை வார்த்தையை வாழ்வாக்கி ஆன்மீகத்துக்குள் ஆண்டவருக்குள் வாழ்வோம். ஆனால் இன்று நாம் இவ்வாறு வாழ தவறுகிறோம். காரணம் என்னவெனில் தகவல் தொழில் நுட்பத்தின் அபரீதமான வளர்ச்சி அவற்றிலிருக்கும் ஆயிரம் நன்மைகளை விடுத்து அதிலிருக்கும் தீமையானவற்றில் எம் பொன்னான நேரத்தை வீணடிக்கின்றோம். எம்மில் நித்திரை விட்டு எழுந்தவுடன் எத்தனைபேர் இன்று கையடக்க தொலைபேசியுடன் கண் விழிக்கின்றோம். ஆனால் ஆன்மீக சிந்தனைப்படி இறைவனைத் தொழுது எழுவதே ஒரு கிறிஸ்தவ குழந்தையின் தலையாய கடமையாகும். எம்முடைய வாழ்க்கையை வேதம் ஒரு புகைக்கு ஒப்பிடுகிறது.

அனைத்தும் மாயையாக அவசியமற்றதாக இருக்கும் இருக்கும் விடயங்களுடன் நாம் பின்னிப் பிணைந்துள்ளோம்... விசேடமாக இளையோரே இவற்றிற்கு அடிமையாகியுள்ளார்கள்...

இவற்றிலிருந்து விடுதலைபெற தூய பவுலடியார் கூறுவது என்ன என பார்ப்போம். **(1 தீமத் 4:1–3) நீ இளைஞனாக இருப்பதால் யாரும் உன்னை தாழ்வாக கருதாது இருக்கட்டும்....** இளைஞர் தம் வாழ்வை மாசற்றதாய் காத்துக் கொள்வது எப்படி? இறை வார்த்தையைக் கடைப்பிடிப்பதாலன்றோ?



குற்றமிழைக்காதவர் என இவ்வுலகில் யாருமில்லை. ஆலயம் செல்ல எம் கிறிஸ்தவ கடமைகளை செவ்வனே செய்ய நாம் பல சாக்கு போக்குகளை முன்வைக்கிறோம். தடைகளை தாண்டித்தான் நாம் வெற்றியை சுவைக்க முடியும். மேதகு அப்துல் கலாம் சொல்லி சென்றுள்ளார், வெற்றியை சுவைப்பதற்கு அவசியமாக இருப்பது தடைகள் தான். அதனால் ஒரு மனிதனுக்கு தடைகள் வாழ்வின் அவசியமாகிறது. இளையோராகிய நாம் எம் ஆன்மீக சிந்தனைகளை வளர்த்து இறையருளை நிதமும் வேண்டி எம் சிந்தனை, சொல், செயல்களை எல்லாம் இறைவனுக்குள் சங்கமம் ஆக்குவோம். உள்ளுவதெல்லாம் உயர்வுளல் என்னும் கூற்றுக்கு அமைய வாழ்வோம்.

**ஆக்கம்: அருட்சகோதரி ராணி**

# திருக்கெழுத்து புதிர் 91

**லேவியர் நூல் {1-20}**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | | 2 | | | | |
| | 3 | | | 4 | | 5 | | 6 | |
| 7 | | | | | | | | | 8 |
| | | | 9 | 10 | | | | | 11 |
| | 12 | | | | | 13 | | | 14 |
| 15 | | 16 | | | | 17 | | | |
| 18 | | | | | | | 19 | | |
| | 20 | | 21 | | | 22 | | | |
| | 23 | | | 24 | | 25 | | | 26 |
| | | | 27 | | 28 | | | | 29 |

## இடமிருந்து வலம்

1. பலிப்பீடத்தின் மேலிருக்கும் இரத்தத்திலும் சிறிது எடுத்து .........மேலும்
2. திருப்பொழிவு எண்ணெயில் கொஞ்சம் வார்த்து அவரை ..............படுத்தும்படி
3. மோசே..............ஆண்டவர் கட்டளையிட்டபடி செய்தார்.
5. தலைமுடி முதிர்ந்து ........வர் மொட்டையானால்
6. இது உங்கள் தலைமுறை தோறும்........த நியமமாக
7. அதன் இனம்......... அதன் இனம் தீக்கோழி கூகை
12. தன் உடைகளைத் துவைத்து, தன் உடலை ............. நீரில் கழுவி
15. அருவருக்க வேண்டியவை ..........கருடன், கடலுாராஞ்சி.
16. உயிருள்ள.........யை குடியிருப்புக்கு வெளியே
17. இது உங்கள்.............தோறும் மாறாத நியமமாக
18. குற்றம் நீக்கும் பலியின்..........யில் இருந்து சிறிது எடுத்து
19. .............வலக்கை விரலை அதில் தோய்த்து ஏழு முறை
20. புளிக்காரம்.........எதையுமே ஆண்டவருக்கு
21. நெருப்பில் இருக்கிற...........களின் மேல் எரியூட்டுவார்.
22. வெள்ளாட்டுக்குட்டியையோ.......... போக்கும் பலியாகக்
23. அவற்றின்மேல்........குடல்களிடத்தில் இருக்கும் கொழுப்பும்
25. அதை துாயதலத்தில் உண்ணவேண்டும். அது மிகத்.............
28. அதன் தலையின்மேல்............அவர் புதல்வரும்

## வலமிருந்து இடம்

2. ஆண்டவரின்...........ஆர்த்திப் பலியாகக் கொண்டு
8. இஸ்ராயேல் மக்கள் கூட்டமைப்பு..........பாவம் போக்கும்
11. ஆரோனும் அவர் புதல்வரும் தங்கள்........... வைத்தனர்.
13. அது தோலில் தோன்றுகின்ற வெள்ளைத்............
14. தலைமுறை தோறும் மாறாத............. மாக விளங்கும்
17. அவற்றின் சடலத்தை எடுப்போர்............ உடை-களை
19. அதன்..............தம் கையை வைத்து சந்திப்பு
27. அவற்றால் குரு அவளுக்கு கறை.............. செய்வார்
29. ..........கையில் எஞ்சியிருக்கும் எண்ணையில் சிறிது

## மேலிருந்து கீழ்

1. நீ இஸ்ராயேல் மக்களிடம் மாடு........வெள்ளாடு
2. நுழையும்போது............இரசத்தையோ, மதுவை-யோ
5. அனைத்தும் விலக்குக் காலப் படுக்கைக்கு .............
7. நான்கு................ஊர்வனவற்றையும் பல கால்களுள்ள
8. தலையில்...........அணிவித்து பாகையின்மேல்
11. உணவுப்படையலைக் கொண்டு வந்து தம்.......... எடுத்து
18. கிடாய் குட்டிகளுள் ஒன்றையும்...............நீக்கும் பலி
24. ஒருவர் சிந்திக்காமல் வாய்விட்டு ............. யிட்ட பின்னர்

## கீழிருந்து மேல்

4. ..........தன் நார்ப்பட்டு அங்கியை அணிந்து தன்
5. புதல்வியரும்..........துாய்மையான இடத்தில் வைத்து
6. செத்ததைத் தொடுகிறவர்................வரை தீட்டு
9. அனைவருக்கும்...........கழுவாய நிறைவேறும்படி
10. குருகு............இராசாளி அதன் இனம்
12. கால் நடையையோ, தீட்டான........... ....வனவற்றையோ
16. கிடாய் குட்டிகனில் உன்றையும்...........குற்றம் நீக்கும்
19. ஏனெனில் நோய் அவர்.............யில் உள்ளது
26. குடல்களை..........கொழுப்பும் அவற்றைச் சுற்றியுள்ள
27. நான் வழங்கும் கானான் நாட்டிற்கு ................ வந்த

உம் திருமகனின் சொற்களை எங்கள் மனத்தில் இருத்தும்படி ஆண்டவரே, எங்கள் இதயத்தை திறந்தருளும்.




1. எதனை பலியிட்டால் ஆண்டவருக்கு வெறுப்பைத்தரும் என்று கூறப்படுகிறது?

2. உங்கள் கடவுளாகிய ஆண்டவரின் கட்டளைகளுக்குக் கீழ்ப் படியாமல் நடந்தால், முன் அறிந்திராத பிற தேவர்களைப் பின்பற்றி னால் என்ன கிடைக்கப்பெறும் என்று கூறப்படுகின்றது?

3. கடவுளாகிய ஆண்டவர் கற்பித்தபடி ஏதாதையர், அமோறையர், கானானையரை எதனால் வெட்டக்கடவாய் என்று கூறப்படுகிறது

4. குருக்களுக்கும், லேவியருக்கும் இவர்களுடைய கோத்திரத் தைச் சேராதவர்களுக்கும் யாருடன் பங்கும் உரிமையும் இல்லை எனக் கூறப்படுகிறது?

5. திரளான குதிரை வீரரைச் சேர்த்ததினால் செருக்குற்று மக்களை எகிப்துக்கு திரும்பக் கொண்டு போகவே கூடாது என்று ஆண்டவர் என்ன கட்டளையிட்டதுடன் என்ன செய்ய வேண்டும் என்றும் கட்டளையிட்டிருந்தார்?

6. ஆண்டவர் ஏற்படுத்தியிருந்த மன்னிப்பு ஆண்டில் யாரிடம் கடனைத் தண்ட அதிகாரம் இல்லை என்று கூறப்படுகின்றது?

7. தந்தையின் சொத்தை அனுபவிப்பதுமன்றி மற்றவர்களைப் போல் உணவுக்காகத் தன் பாகத்தையும் சரியாகப் பெற்றுக் கொள்பவன் யார்?

8. கடவுளாகிய ஆண்டவரை முழு இதயத்தோடு நேசித்து ஊழியம் செய்தால் எந்த உணவை உண்டு நிறைவு செய்வீர்கள் என்று கூறப்படுகின்றது?

9. சாவுக்கு உரியவனுடைய குற்றம் எத்தனை சாட்சிகளுடைய வாக்கு மூலத்தால் தெளிவுபடுத்தப்படுகிறது?

10. நீங்கள் ஆண்டவரின் புனித மக்கள் என்பதால் ஒருவர் இறந்ததை முன்னிட்டு எதனைச் செய்ய வேண்டாம் எனக் கூறப்படுகிறது?

## விவிலிய பொது அறிவுப்போட்டி முடிவுகள் ~ 90

### உப ஆகமம் 1-10

1. விடை மோவாப் நாட்டில் உப ஆகமம் 1:5
2. விடை ஆரோனை உ. ஆ – 9:21
3. விடை – இஸ்ராயேலருக்கு உ. ஆ 6:5
4. விடை எசாயு புதல்வருக்கு 2: 22
5. விடை பெல்பெகோரை – 4:3
6. விடை லேவியர் கோத்திரம் உ.ஆ – 10:8
7. விடை சரியோன்–சனீர் உ.ஆ– 3:9
8. விடை – “ சாபத் ” உ.ஆ – 5:14
9. விடை– வணங்கா கழுத்துள்ள இனம் உ.ஆ– 9:14
10. விடை – மோயிசனால் இஸ்ராயேல் மக்களுக்குக் கூறப்பட்டது. உ. ஆ 5:5

## விவிலிய பொது அறிவுப்போட்டி 90 பரிசு பெறுபவர்கள் உப ஆகமம் 1~10

**பரிசு பெறுபவர்கள்**

1. திருமதி: றேமன் சாள்ஸ் சாந்தினி.
2. திருமதி: யோண்ஷன் நிசாந்தினி.

**ஏனையவர்கள்:**

திருமதி: யெஜம் நந்தா.

திருமதி நீற்ரா செல்வரட்ணம்.

செல்வி: யோசவ் சியாமளா.

திருமதி: மேரி ஜொய்சி.

திருமதி: கெலன் அன்னவதி.

திருமதி: ஜோண்ஷன் மேரி பில்டா.

திருமதி: அன்ரன் ரஞ்சிதம்.

**அருட்பணி: போல் மத்தியூ மதன்ராஜ்**
**பணியக இயக்குனர்**

## புதிர் தோட்டம் 96

1. காலில் தண்ணீர் குடிப்பான் தலையில் முட்டையிடுவான் அவன் யார்.?
2. பூ கொண்டைக்காரன் சாலையில் எழும்பி விடுவான் அவன் யார்
3. கடலில் கலந்து கரையில் பிரிந்து தெருவிலே திரியும் பூ அது என்ன?
4. ஒட்டியவன் ஒருவன் பிரித்தவன் இன்னொருவன் அவன் யார்? கடிதம்
5. ஊரெல்லாம் ஒரே விளக்கு அதற்கு ஒரு நாள் ஓய்வு அது என்ன?
6.ஒவென்று உயர்ந்த மலை நடுவே உடன்பிறப்பு இருவர், ஒருவர் மற்றவரை பார்ப்பதும் இல்லை பேசுவதும் இல்லை அவர்கள் யார்?
7. அக்கா விதைத்த முத்து அள்ள முடியாத முத்து .அது என்ன?
8.குண்டு குள்ளனுக்கு குடுமி நிமிர்ந்தே இருக்கும் அது என்ன? கத்தரிக்காய்
9. கந்தல் துணி கட்டியவன் முத்துப் பிள்ளைகளைப் பெற்று மகிழ்ந்தான். அவன் யார்?
10. காலையிலும் மாலையிலும் நெட்டை மதியம் குட்டை நான் யார்?

## புதிர் தோட்ட விடைகள் 95

| | | |
|---|---|---|
| 1. பாசி<br>2. சீட்டு கட்டு<br>3. வயது<br>4.தலை உச்சி வகிடு | 5. புகை<br>6.விளக்குத் திரி<br>7.ஆர்மோனியம் | 8. நத்தை<br>9.அண்டா (பெரிய பானை)<br>10. கனவு |

# விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி - 90

## 11 குறிப்பேடு 1:18

### குலுக்கல் முறையில் பரிசு பெறுபவர்கள்

**1ம் பரிசு:** திருமதி: சுரேந்திரன் றேணு.

**2ம் பரிசு:** திருமதி: ஜெயம் நந்தா.

**3ம் பரிசு:** திருமதி: அருளப்பு கிறிஸ்டியன்.

### ஏனையவர்கள்

1. திருமதி! டடிஸ்லோஸ் யோகமலர்.
2. திருமதி: ஜேசுதாசன் மேரி யோய்சி.
3. செல்வி: யோசவ் சியாமளா.
4. திருமதி: பெர்னாட் இமெல்டா
5. திருமதி: நீற்ரா செல்வரெட்ணம்.
6. திருமதி: யோசவ் அன்னவதி.
7. திருமதி: ஜோன்சன் நிசாந்தினி.
8. திருமதி: அன்ரன் ரஞ்சிதம்.
9. திருமதி:லோறன் அன்ரனி யசிந்தா.
10. திருமதி: லூயீஸ் ஷூட் வினிசியா.
11. திருமதி: அன்ரன் குணசேகரம் கோல்டா.

## சிறுவர்களுக்கான விவிலிய வினா - 97

1. ஆண்டவர் யார் உருவில் மனிதரைப் படைத்தார்?
2. ஆதாமுடைய மகன் பெயர் என்ன? எத்தனையாவது வயதில் இவரை பெற்றார்?
3. வானத்துக்கு விண்ணுலகம் என்று பெயரிட்டவர் யார்?
4. உடன்படிக்கையின் அடையாளம் எது?
5. ஆபிரகாமின் மனைவியினதும் மகனதும் பெயர்கள் என்ன?
6. உலகினில் ஒளியையும் இருளையும் வெவ்வேறாக பிரிந்தவர் யார்?
7. வெள்ளப்பெருக்கு நின்ற நாற்பதாம் நாளில் நோவா எந்த பறவையை வெளியில் விட்டார்?
8. ஆண்டவர் ஆபிரகாமை எந்த நாட்டிற்கு செல்லுமாறு பணித்தார்?
9. நோவாவை எந்த மரத்தினால் பேழை கட்டும் படி ஆண்டவர் கூறினார்?
10. ஆபிரகாம் எத்தனை ஆண்டுகள் உயிர் வாழ்ந்தார்?

## சரியான பதில்கள்

### இடமிருந்து வலம்

3. தலை
4. நிறை
11. ஞானம்
16. காளை
17. வான
18. இயலாத
19. தல
24. விடை
27. மகன்
30. மடல்
37. அபியா
38. அவன்

### மேலிருந்து கீழ்

5. வலு
6. கனம்
7. உன்
9. நான்
10. நல்ல
15. என்
18. இளம்
22. உமது
23. பின்
25. மேல்
29. உன்
30. மழை
32. அணி
35. பொன்
36. நீதி

### வலமிருந்து இடம்

2. ஆசா
3. தம்
4. நிலை
6. கருவறை
9. நாட்டை
20. மக்களே
21. மலை
25. மேலும்
31. துயில்
32. அவரது
34. ராமா
35. பொருள்
40. கதிரவன்

### கீழிருந்து மேல்

7. உறை
8. ஒரு
9. நானும்
10. நழு
12. படை
14. அதை
20. மனம்
22. உல
26. புனித
28. கலன்
29. உடை
32. அரச
37. அழை
39. வழி
40. கடும்

## உறவுகள் 96க்கான சிறுவர் விவிலிய பதில்கள்

**1. கடவுள் என்னை உருவாக்கினார்.**

**2. தேவன் எங்கும் இருக்கிறார்.**

**3. அவருடைய மகிமைக்காக மட்டும்**

**4. அவரில் அன்பு கூறுவதின் மூலமாகவும், அவருடைய கட்டளைகளுக்கு கீழ்ப்படிவதின் மூலமாகவும்,**

**5. ஒரே ஒரு கடவுள் தான் இருக்கிறார்.**

**6. மூன்று ஆள்தன்மைகளில்**

**7. தந்தை, மகன், தூய ஆவியானவர்**

**8. கடவுள் ஆவியாக இருக்கிறார். அவருக்கு மனிதனைப்போல ஒரு சரீரம் கிடையாது.**

**9. பரிசுத்த ஆவியானவரால் போதிக்கப்பட்ட பரிசுத்த மனிதர்கள்.**

**10. தேவன் பூமியின் மண்ணினாலே ஆதாமின் உடலை உருவாக்கினார். ஏவாளை ஆதாமின் உடலிலிருந்து உருவாக்கினார்.**

# பணியகச் செய்திகள்



திருமண ஆயத்தம் பெற விரும்புவோர் 3 மாதத்திற்கு முன்பாக அருட்பணியாளருடன் தொடர்பு கொள்ளவும்.

1வது பிரிவு: 07-02-2026 {9 :30- 17:00}
08-02-2026 {9 :30- 17:00}

திருமண அருட்சாதன வகுப்பு,
பெல்வில் சிற்றாலயத்தில் நடைபெறும்
இரு அமர்விலும் முக்கியம் கலந்து கொள்ளவும்



திருமுழுக்கு ஆயத்தம் பெற விரும்புவோர் ஒரு மாதத்திற்கு முன்பாக அருட்பணியாளருடன் தொடர்பு கொள்ளவும்.

**வளர்ந்தோருக்கான**
**திருமுழுக்கு ஆயத்த வகுப்பு**

தை: புதன் 21ந் திகதி -சனி 24ந் திகதி 17:30-18:30
மாசி: புதன் 25ந் திகதி -சனி 28ந் திகதி 17:30-18:30
பங்குனி: புதன் 11ந் திகதி - சனி 14ந் திகதி 17:30-18:30

baptêmes

**சிறுவர்களுக்கான**
**திருமுழுக்கு ஆயத்த வகுப்பு**

தை: புதன் 21ந் திகதி -சனி 24ந் திகதி 18:00-19:30
மாசி: புதன் 25ந் திகதி -சனி 28ந் திகதி 18:00-19:30
பங்குனி: புதன் 11ந் திகதி - சனி 14ந் திகதி 18:00-19:30

இவ் வகுப்புக்கு பெற்றோர், ஞானப் பெற்றோரின் வருகை முக்கியம்

## ஆனி - பணியகத் திருப்பலிகள்

**14-06-2026 - புனித அந்தோனியார் திருவிழா**
15:30 -Eglise St. Joseph des Nations – Goncourt Paris

**13-06-2026 - புனித அந்தோனியார் திருவிழா சார்சல் பணித்தளப் பெருவிழா**
18:00 Eglise Ste.Genivieve - Garges Sarcelles

**21- 06-2026 இயேசுவின் திரு இருதயவிழா**
11:30 Chapelle NDR. de Belleville – 75011 - Paris

**28- 06-2026 கிறீஸ்துவின் திருவுடல் திருஇரத்தப் பெருவிழா**
18:00 Notre Dame de France

## சித்திரை - பணியகத் திருப்பலிகள்

**29 –03 - 2026 - குருத்தோலை ஞாயிறு**
12:30 Eglise St. Joseph des Nations-75011-Paris

**02–04 - 2026 - புனித வியாழன்**
17:00 Chapelle NDR.de Belleville – 75011 - Paris

**03- 04 - 2026 புனித வெள்ளி வழிபாடு**
16:00 Eglise St. Joseph des Nations – Goncourt – Paris

**04- 04-2026 பாஸ்காத் திருவிழிப்பு**
18:00 Chapelle NDR. de Belleville – 75011 - Paris
18:00 Eglise Ste.Genivieve - 95140 - Garges Sarcelles

**05- 04-2026 ஆண்டவரின் உயிர்ப்புப் பெருவிழா**
12:30 Notre Dame de Blanc - Mesnil
12:30 Eglise St. Joseph des Nations – Goncourt – Paris
17:00 Eglise St. Marie – Neuilly Sur Marne

**12- 04-2026 இறை இரக்கப் பெருவிழா**
**Aubervilliers பணித்தளப் பெருவிழா**
12:00 Eglise St Martha - Aubervilliers

## வைகாசி - பணியகத் திருப்பலிகள்

**01-05-2026 -தொழிலாளர் புனித சூசையப்பர் திருவிழா**
12:30 -Eglise St. Joseph des…Goncourt Paris
17:00 - Vigneux sur seine

**03-05-2026 -புனித சூசையப்பர் திருவிழா**
17:00 - Eglise St Martin - Noissy Champs
பணித்தளப் பெருவிழா

**10- 05-2026 - புனித பாத்திமா அன்னை திருவிழா**
17:00 Eglise St Marie – Neuilly sur Marne

**17- 05-2026 - புனித பாத்திமா அன்னை திருவிழா - பணித்தளப் பெருவிழா**
12:30 - Eglise St. Joseph des Nations – Goncourt Paris

**24- 05-2026 - புனித பிலிப்பு நேரியார் திருவிழா**
11:30 Chapelle NDR. de Belleville – 75011 - Paris

**31- 05-2026 சார்ட் திருத்தல திருயாத்திரை**
14:30 Cathedrale Notre Dame -18 Cloitre Notre dame - Chartres

## பிரான்ஸ் - இலங்கைத் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தின்
## Aulnay sous Bois - பணித்தள விழா- 2025








## பிரான்ஸ் - இலங்கைத் தமிழ் கத்தோலிக்க ஆன்மீகப் பணியகத்தின்
## Chelles - பணித்தள விழா- 2025